JESUS NEVER FAILS
DIVINE GOOD NEWS CENTER

# ஜீவ மன்னா

அனுதினமும்

2013 மே



பாவ வாழ்க்கையில் கம்பளிப் புழுவாக
வாழ்ந்த எனக்காக நீர் சிலுவையிலே மரித்து
பலரைக் கவரும் வண்ணத்துப்பூச்சாக மாற்றிய
இயேசுவே உமக்கே ஸ்தோத்திரம்!

# சந்தா பணத்தை குறித்த தினங்களில் எம் கரம் கிடைக்கச் செய்த வாசகர்களுக்கு இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் !

1. இன்னும் சந்தா பணத்தை செலுத்தாத சகோதர சகோதரிகள் இருப்பீர்களென்றால்.மிகுந்த அக்கறை செலுத்துமாறு மிக அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.




2. உங்களுடைய மன்னா சஞ்சிகையானது குறித்த காலத்தில் கிடைக்காவிட்டால் உங்களுடைய TM இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

3. உங்களின் சந்தா பணத்தையும் உங்கள் உளமார்ந்த காணிக்கையையும் போதகர் A.J ஜோசப் என்ற பெயருக்கு கொமர்சல் வங்கி கணக்கு இலக்கத்துடன் 8076982701 தொடர்பினை ஏற்படுத்தி பணத்தை அனுப்பலாம்.



4. அஞ்சல் அலுவலகத்தின் மூலம் சந்தா பணத்தை அனுப்ப வேண்டுமாயின் (Money Order-மணி ஓடர்) மாத்திரம் என்றால் கிரேனட்பாஸ் தபால் காரியாலயம் (Grandpass Post Office) என குறிப்பிட்டு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.






போதகர்
ஏ.ஜெ.ஜோசப்

## அட்டைப்படக் கதை

அன்பார்ந்தவர்களே, இம்முறை ஜீவமன்னா அனுதினதியான அட்டைப்படத்திலே கம்பளிப் புழு தன்னைச்சுற்றி ஒரு கவசத்தை அமைத்துக் கொண்டு இருப்பதைக் காண்கின்றீர்கள். பின்பு அக்கவசத்தை கிழித்துக்கொண்டு அலங்காரமான வண்ணத்துப்பூச்சியாக வெளியில் வருவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. மற்றைய விலங்குகள் அவைகளின் ஸ்வரூபத்திலேயே தனது குட்டிகளை அல்லது வர்க்கத்தை ஈனுகிறது. வண்ணத்துப் பூச்சியின் பிறப்பிலே மாத்திரம் மிகவும் அவலட்சனமான அருவருப்பான கம்பளிப் புழு விற்கூடாக பெரியவர் சிறியவர் யாவரும் மனங் கவரும் விதத்தில் மிகவும் அழகான வெவ்வேறு வர்ணங்களையும் அலங்காரங்களையும் உடைய வெவ்வேறு வண்ணத்தி பூச்சிகள் உருவாகுகின்றது.

இவற்றைக் குறித்து ஆவிக்குரிய ரீதியிலே சிந்திக்கும் போது எமது ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவை நாம் ஏற்றுக்கொள்ளவதற்கு முன்பதாக நாமும் இவ்வாறே கம்பளிப் புழுவைப் போல இருந்தோம் ஆயினும் தன் உறையைக் கிழித்துக் கொண்டு வெளியே வரும் போது மிகவும் அழகான வண்ணாத்துப்பூச்சியாக மாறுவதைப் போல எமது மீட்பரும் இரட்சகருமாகிய இயேசுக்கிறிஸ்து எமது பாவங்களுக்காக சிலுவையில் மரித்து அவரது இரத்தத்தினாலே எமது சகல பாவங்களையும் கழுவி பரிசுத்தமாக்கி எமது வாழ்வை உயர்த்தி எம்மை அழகாக மாற்றினார். நாம் அவரை ஏற்றுக்கொண்டபடியால் கவசத்தின் வெளியே வந்த வணணத்துப்பூச்சியைப் போல நாம் சுதந்திரமாய் வாழ்கின்றோம். நீங்களும் அழகான வண்ணத்துபூச்சாக மாறுங்கள்.

*உங்கள் எல்லாருக்கும் இயேசு துணை*

# சர்வ வல்லவரான தேவ பிதாவானவருக்கே



## ஆசிரியர் உரை

தேவ பிள்ளைகளே,

### ஜீவ மன்னாவிற் கூடாக ஆத்மீக எழுப்புதலை உருவாக்குவோம்

பிரியமுள்ள தேவ ஜனங்களே, ஜீவ மன்னா 20 வெளிப்பாடுகளிலும், உங்களைச் சந்திக்க தேவன் கொடுத்த மாகப்பெரிய கிருபைக்காகவும் அநுக்கிரகத்திறகாகவும் தேவனுக்கு முதற்கண் நன்றி செலுத்திகின்றேன். இதுவரை ஜீவ மன்னா தினதியானங்கள் தொடர்ந்து உங்களுக்கு கிடைக்கச் செய்த தேவனுக்கு நன்றி கூறுகின்றேன். அத்தோடு மிகச்சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட எங்கள் ஜீவ மன்னா என்னும் ஆகாரமானது பலுகி பெருகி இதுவரை பெரும் பாலோனோருக்கு எழுப்புதலைக் கொடுத்து பெலப்படுத்தி, தைரியத்தையளித்துள்ளது. மட்டுமல்லாது பரிசுத்த வேதாகம வசனங்களையும் ஆத்மீக ஆனுபவங்களையும், கர்த்தரை அறிகின்ற அறிவு வளர்ச்சியையும் கொடுத்து வெற்றியுடன் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றமைக்காக இச் சஞ்சிகையின் மூல ஆசிரியராகிய நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆனால் இத்தகையதான உயர்வான நிகழ்வு இயேசுக்கிறிஸ்துவிடமிருந்து எமக்கு அருளப்பட்டிருக்கும் முடிவில்லா இரக்கத்தினாலேயாகும். ஜீவ மன்னா உங்களுக்கு அளவில் சிறிதாகக் காணப்படினும், அதிக அளவில் பாரத்தோடு, ஜெபத்தோடு ஆத்மீகமாகவே இதை தயாரித்து, அதிக அளவில் பணம் விரயம் செய்து உங்கள் கரங்களுக்குக் கிடைக்கச் செய்வதனால், வாசக அன்பர்களாகிய நீங்கள் இன்னும் அதிக முயற்சியோடு அர்ப்பணிப்போடு புது வாசகர்களை எங்களுக்கு அறிமுகம் செய்ய மறந்து விடாதீர்கள் ஜீவ மன்னாவை தொடர்ந்து உங்களுக்களிக்க பொருளாதாரத்தில் கைக் கொடுக்கும்படியாகவும், விஷேசமாக ஜெபத்தில் எங்களை தாங்கும்படியாகவும் கேட்கிறேன.

இதன் மூலம் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சி பயனைப் பெற்றுக் கொண்டீர்களாயின் இதை நீங்கள் வாசித்து முடித்து இன்னுமொருவருக்கு வாசிக்கக் கொடுத்து ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ள உதவி செய்யுங்கள் ஜீவிக்கின்ற தேவன் ஞானத்தின் ஊற்றானதால் தேவனின் ஆத்மீக அறிவை இன்னும் அதிகமாக பெற வேண்டுமெனவும் ஆத்மீகத்தில் கர்த்தரை அறிகின்ற அறிவல் வளர்ச்சி பெற வேண்டுமென்றும் இயேசுவின் நாமத்தில் பிரார்த்திக்கின்றேன்.

**இயேசுவுக்கு இருதயத்தைக் கொடுப்போர்**
**பாவத்தில் மீட்பு பெறுவர்**
**அதிகாலை மன்னா வாசிப்போர்**
**ஆத்மீக உயர்வை பெறுவர்**

இப்படிக்கு
**இயேசு கிறிஸ்துவிற்குள்**
போதகர் ஏ.ஜே.ஜோசப்
***இயேசு கைவிடார் சுவிஷேசப் பணியகம்***

**மன்னா வாசகர்களே TM இலக்கத்தை அனுப்ப மறந்துவிட வேண்டாம்.**

❋ ❋ ❋

ஜீவ மன்னா

மே 01

புதன்

## அளவில்லா அன்பினால் எம்மை ஆட்கொள்ளும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

யாக்கோபு 02 - 03

**"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்."**(யேவான் 3:16)

அன்பார்ந்த தேவனுடைய பிள்ளைகளே, புதிய மாதத்தின் புதிய நாள் சந்தோஷமாக அமையும்படி ஜீவனுள்ள இயேசுவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். இந்த ஜீவ மன்னாவின் தினசரி இதழை வாசித்து தியானிக்கும் நீங்கள் பேறு பெற்றவர்கள் என்பது நிச்சயம். எமது இரட்சகர் இயேசுக்கிறிஸ்த்து மூலமாய் பரலோக தந்தையின் சொந்தப் பிள்ளையாக தெரிந்துக் கொண்டது பேரதிஷ்டமே.

பாசமிக்கவர்களே எமது பரலோக தேவ பிதா எம்மை மிகவும் நேசிக்கிறார் என்பது நாம் அறிந்ததே மேலே கூறப்பட்ட யோவான் 03: 16 என்ற வேத வசனம் பரலோகத்தின் தேவன் தன் ஒரே பேறான குமாரனை எங்களின் நிமித்தமாய் உலகிற்கு அனுப்பியது அவர் சகல மனிதர்கள் மீதும் கொண்ட அன்பினால் என்று சொன்னால் மிகையாகாது ஆகவே நாங்கள் தேவனை அறியாமல் அந்தகாரலோகத்தில் பாவத்தில் ஜீவித்துக் கொண்டிருந்த போது எமது பரலோக தேவனான சர்வபராக்கிரமத்தின் தேவன் படைப்பின் கர்த்தர் தன் ஏக புத்திரன் இயேசுக்கிறிஸ்த்துவை எமது பாவங்களுக்காக ஜீவ பலியாக சிலுவையில் மரிக்கும்படியாய் இப் பூமிக்கு அனுப்ப சித்தம் கொண்டாரெனில் மனிதர்கள் மீது அவர் கொண்ட அன்பினிமித்தமே ஆகவே ஆத்துமாக்களைக் குறித்ததான அவரது அக்கறையும் அன்பும் அளவிடமுடியாத எத்தனை கனம்பெற்றதாயிருக்கிறது என சிந்தித்துப் பாருங்கள். நான் இதை அநேக தடவைகள் எண்ணி வியந்துள்ளேன். இந்த அன்பு எவ்வளவு விசேஷமானதும் எண்ணிலடங்காததுமாக உள்ளது. அது அநாதி சதாகாலங்களிலும் மாறாதது ஆகையால் இன்றும் அவர் அவ்வண்ணமாகவே எம்மை நேசிக்கிறார்.

அன்பார்நத தேவப் பிள்ளைகளே எங்கள் அன்பு பிதாவானவர் எம்மை குணமாக்கவும் ஆறுதல் படுத்தவும் மேன்மைப்படுத்தவும் உயர்த்தவும் கௌரவப்படுத்தவும் இன்னும் எம் தேவைகள் அனைத்தையும் சந்திக்கும்படியும் ஆபத்து வேளைகளில் சகாயம் புரியவும் பரத்திலிருந்து எம்மை நோக்கி தம் கண்களினால் பார்வையை செலுத்திக்கொண்டிருக்கிறார். ஆயினும் எமது எதிரியான சத்துருவானவன் எமது விசுவாசத்தை தகர்த்தெரியும்படி தோல்வியை மனச்சோர்வை உண்டு பண்ணக்கூடிய சிந்தைகளை உருவாக்கி எம்மை பின்னடையச் செய்வான் ஆனால் உங்களுடைய உள்ளம் கலங்கவோ பயப்படவோ திகைக்கவோ இடங்கொடாது விசுவாசத்தில் நிலைத்திருங்கள். நீங்கள் கானும் தோல்விகள் கேட்கும் உறுதியற்ற வார்த்தைகள் இவைகள் உங்கள் உள்ளத்தை சலனப்படுத்தி விசுவாசத்தை நிலைகுலைக்க சாத்தானுக்கு இடம் கொடாதீர்கள்.உங்களை வாட்டிவதைக்கும் பிரச்சினைகள் சங்கடங்கள் துன்பங்கள் இவைகளால் பாதிக்கப்பட்ட நிலையில் உடைந்த உள்ளத்தோடு இந்த வேளையிலும் இருக்கி0ன்றீர்களா? இந்நேரத்திலும் முழங்கால்படியிட்டு கைகளை பரத்துக்கு நேராக உயர்த்தி தகப்பனே உங்களின் ஏக புத்திரனை என் நிமித்தம் இப் புவியில் அவதரிக்கச் செய்து என் மீது அன்பு கூர்ந்தவரே இன்றும் எனக்கு தயை புரிந்து சகாயம் செய்து விடுதலைப் பெற்றுத்தாரும் தேவனே என விசுவாசத்தோடு கண்ணீரோடு மன்றாட்டை ஏறெடுங்கள் சர்வவல்லவர் உங்களுக்கு பதிலளிப்பார் இன்று ஜெயத்தின் நாள்



என் நேசத்தகப்பனே சதாகாலங்களிலும் மாறாத உங்கள் அன்பிற்காய் நன்றி இன்றும் சாத்தானின் எல்லாவித தீய பொல்லாத துர்த்தனமான கிரியைகளை இயேசுவின் நாமத்தினால் இயேசுவின் அக்கினியால் அவனுடைய அஸ்திபாரங்களெல்லாம் சுட்டெரித்து தகர்த்தி நிர்மூலப்படுத்தி. உங்கள் அன்பினால் என்னை நிரப்பி வழி நடத்துங்கள் இயேசுவின் நாமத்தினால் ஆமென்.

யாக்கோபே, இஸ்ரவேலே, இவைகளை நினை; நீ என் தாசன்; நான் உன்னை உருவாக்கினேன்; நீ என் தாசன்; இஸ்ரவேலே, நீ என்னால் மறக்கப்படுவதில்லை. யேவான் 44:21

ஜீவ மன்னா
மே 02
வியாழன்

**பொல்லாப்போ வாதையோ எம்மை அனுகாது காக்கும் தேவன்!**


இன்றைய வேதவாசிப்பு
யாக்கோபு
04 - 05

**"ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது."**
(சங்கீதம் 91:10)

எமது ஜீவிக்கிற தேவனாகிய இயேசுக்கிறிஸ்த்துவினால் கிருபையும் சமாதானமும் சகல ஆசீர்வாதமும் உங்களில் தங்கி வெளிப்படும்படியாய் ஆசீர்வதித்து இன்றைய நாளை வரவேற்கிறேன். தேவனாகிய இயேசுக்கிறிஸ்த்துவை அறிந்துக்கொள்ளும் சலாக்கியத்தை பெற்றுக்கொண்டது மிக விசேஷமான காரியமாகும். சுழன்றுக் கொண்டிருக்கும் இப் புவிதனில் மனித சிந்தனைக்கு எட்டாத எண்ணிலடங்கா ஆச்சரியமான காரியங்கள் நடைப்பெற்றுக் கொண்டிருக்கிறது. இதில் உயிர்கள் அடங்கிய அபூர்வமான அதிசயமான அநேக காரியங்கள் நிகழ்ந்துக் கொண்டிருக்கிறது. இவ் எல்லாக் காரியங்களில் பின்னணியில் எம்மை உருவாக்கிய சர்வ வல்லமையுள்ள தேவனானவர் இருக்கிறார் என்பதை உணர்ந்து அறிந்துக் கொள்ள சலாக்கியம் பெற்ற அனைவருக்கும் ஆசீர்வாதமானவர்கள்.

தேவனுக்குள் அருமையானவர்களே இவ் வருடத்தின் இரண்டாவது மாதமான மாசி மாதம் வெளியிடப்பட்ட மன்னா தியான நூலின் அட்டைப்படம் உங்கள் நினைவில் இருக்கிறதா? ஒரு பூனை தன் குட்டியை வாயில் கௌவிக கொண்டு செல்கிறது இது ஒரு ஆச்சரியமான காரியமாக தென்படுகிறதல்லவா? குட்டிகளை ஈன்ற தாய்ப்பூனை அவைகள் இருக்கும் இடத்தில் மனிதர்கள் சிறுப்பிள்ளைகளின் நடமாட்டம் அதிகரித்து அவர்களின் பார்வைகள் தன் குட்டிகள் மீது இருப்பதால். அவைகளுக்கு ஆபத்து நேரிடலாம் என எண்ணி அந்த பாதகமான சூழ்நிலையிலிருந்து அவைகளை பாதுகாப்பான இடத்திற்கு மாற்ற இந்தப் பூனைக்கு இவ்வளவு ஞானம் எங்கிருந்து வந்தது அந்த ஞானம் பூனைக்குரியது அல்ல படைப்பின் கர்த்தரால் அந்த மிருகம் படைக்கப்பட்ட போது கொடுக்கப்பட்ட இயற்கையின் நியதியான ஞானமாகும். தாயின் கர்ப்பத்தில் எம்மை உருவாக்கி தெரிந்துக் கொண்டவரும் 02 கோடி மூன்று இலட்ச இலங்கை வாழ் ஜனங்களுக்கு மத்தியில் எம்மை அழைத்தவருமான எமது நேசத்தகப்பன். எம் மீது எவ்வளவு கணகாணிப்பு உள்ளவராய் இருக்கிறார். எவ் வண்ணமாக ஆபத்து வேளைகளில் எம்மைக் காப்பாரென்றும் எவ்வளவு துரிதமாக செயல்படுவார் என்பதை ஒரு கனம் சிந்தித்து அவரின் அன்புக் கரங்களில் அடங்கி தேவனுடைய அரவனைப்பைப் பெற்றுக் கொள்வோம்.

தேவ பிள்ளைகளே இன்றைய மன்னா இதழின் ஆரம்ப வசனம் சங்கீதம் 91:10ன்படி பொல்லாப்பு உனக்கு நேரிடாது வாதை உன் கூடாரத்தை அனுகாது என வாக்களித்துள்ளார். அப்படியாயின் எமது தேவனானவர் உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் எல்லா பொல்லாப்புக்கும் வாதைக்கு விலக்கி காத்து தமது பொருத்தனையை நிறைவேற்றுவார். இன்றை தினமதிலும் உங்களுக்கு எதிராக சத்துருவானவன் கொண்டு வரும் சகல நாச மோசங்களில் உங்களையும் உங்கள் குடும்ப அங்கத்தினர் யாவரையும் விலக்கி காத்திடுவார். அவரை நோக்கி இடைவிடாமல் ஜெபத்தை ஏறெடுங்கள் வெற்றி நிச்சயம் இன்றைய நாள் வெற்றியின் நாள்



என் நேசத் தகப்பனே : நீங்கள் ஆபத்து வேளைகளில் எம்மை காக்கிறவர். னை தன் குட்டிகளை பாதுகாக்கும்படிக்கு ஞானத்தை கொடுத்தவரே உங்கள் சாயலாக எம்மை படைத்தவரே என்னைக் காப்பவரே என்னையே நான் ஒப்படைக்கின்றேன் காத்து வழி நடத்துங்கள் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

---

இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும், பகலில் பறக்கும் அம்புக்கும்,
இருளில் நடமாடும் கொள்ளைநோய்க்கும்,
மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய்.
சங்கீதம் 91:5,6

ஜீவ மன்னா

மே 03

வெள்ளி

## தன் ஜீவனை ஈந்து சாத்தானை தோல்வியடையச் செய்த இயேசுக்கிறிஸ்து !

இன்றைய வேதவாசிப்பு

1 பேதுரு 01 - 02

**"...மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும்,ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்."** (எபிரெயர் 2:14,15)

தேவனுக்குள் அருமையாகப் கிடைக்கப் பெற்ற தேவப்பிள்ளைகளே இன்றும் மரணத்தை ஜெயங் கொண்ட எமது இரட்சகரின் நாமத்தால் ஒரு சிறந்த நாளாக அமையும்படி வாழ்த்துகிறேன். மனிதர்களின் பாவம் சாபம் விலகும்படி மனிதர்களுக்காக சிலுவை மரணத்தை ஏற்றுக் கொண்டவரே மரணத்தை ஜெயங் கொண்டு உயிர்த்தெழுந்தவராக ஜீவனுள்ளவராய் இன்றும் எங்கள் மத்தியில் கிரியை செய்துக்கொண்டிருப்பவரே மெய்த் தேவனாக இருக்கிறீர்.என அறிந்து பாக்கியமுள்ளவராக இருப்பது தேவனுடைய கிருபையே அவரை விசுவாசத்தோடு ஏற்றுக் கொண்டு அவருடைய புத்திர சுவீகாரர்களாய் விளங்கும் ஒவ்வொருவரும் பாக்கியவான்கள். இந்த உன்னதமான வரப்பிரசாதத்தை பெற்றுக் கொண்ட நாங்கள் அனைவரும் எமது மீட்பருக்கு மிகவும் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

தேவப் பிள்ளைகளே ஆரம்பத்தில் கொடுக்கப்பட்ட எபிரேயர் 2:14,15 வசனங்கள் எமக்கு தெளிவுப்படுத்துவது மரணத்திற்கு அதிகாரியானவன் சாத்தான் என்பதாகும். ஆனால் மரணத்திற்கு அதிகாரியாகிய சத்துருவானவனை தனது சிலுவை மரணத்தினால் தோல்வியடையச் செய்தார் என்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகையால் கலங்காதிருங்கள். ஒரு முறை மரணம் அதன் பிறகு நியாயத் தீர்ப்பு என மனிதர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. சகலருடைய ஆத்துமாவும் நியாயத் தீர்ப்பை சந்திக்க வேண்டும். சுகல சரீரங்களும் அடக்கம் செய்யப்படுவது மயானத்தில். மண்ணால் சிருஷ்டிக்கப்பட்ட சரீரம் திரும்புவும் மண்ணுக்கே திரும்பும் என வேதத்தில் கூறப்பட்டுள்ளது. மனிதனாக இம் மண்ணில் பிறந்த நாங்கள் எனறோ ஒரு நாள் பூமியிலிருந்து விடைப்பெற்று சதாகால வாசஸ்தலத்தை நோக்கி செல்ல வேண்டும். புயப்படாதிருங்கள் எமத பரலோக தகப்பன் இம் மண்ணில் நாம் ஜீவிக்கக் கூடிய காலங்களை தந்திருக்கிறார். எமது ஆயுள் நாட்கள் இத்தனை வருடங்கள் என கணக்கிட்டு நியமிக்கப்பட்டுள்ளது. ஆவருடைய குமாரரான இயேசுக்கிறிஸ்துவை விசுவாசித்து அவர் வழியில் நடப்பவர்களுக்கு நியமிக்கப்பட்ட நாளுக்கு முன்பாக மரணம் நேரிடாது. அகால மரணம் நிகழ்வதற்கு தேவன் இடமளிக்க விடமாட்டார். உங்களுக்கு பிரச்சினைகள், கஷ்டங்கள், கவலைகள், வேதனைகள், வியாதிகள் போன்றவற்றை ஏற்படுத்தி உங்களை கலக்கத்திற்குள்ளாகி உங்கள் வாழ்வின் ஒரு முன்னேற்றத்தை காண முடியாதவாறு உங்களை அடிமைப்படுத்தி வைத்திருந்த எல்லா அடிமைத் தனத்தின் கட்டுகளையும் அறுத்தெரிந்து பிசாசின் பிடியிலிருந்து உங்களை மீட்டு உங்களை விடுவித்த தேவன் அவரே அவர் எப்போதும் உடனிருந்து வழிநடத்தி காத்திடுவார். எம் ஆயுட் காலங்களை சம்பூர்ணப்படுத்த வல்லவர்.

உலகப்பிரகாரமாக ஜீவிக்கும் மனிதர்களின் உபத்திரவக் காலங்களில் வரும் நோய்கள், பிரச்சினைகள் கஷ்டங்களில் பரிகாரத்தை காண முடியாதபடி மிகவும் பரிதாபத்துக்குரியவர்களாக வாழ்க்கையில் நொந்து வேதனையோடு வாழ்க்கையில் நம்பிக்கையற்றவர்களாக சோர்ந்து போய் விடுவார்கள். ஆனால் உங்களுக்கு இப்படியான அசம்பாவிதமான காரியங்கள் ஏற்படாது காரணம் உங்கள் பக்கம் ஜீவனுள்ள தேவன் இருப்பதால் நீங்கள் அதிர்ஷ்டசாலிகள். அதனால் சாத்தானுக்கு உங்கள் மீது எந்த அதிகாரமும் இல்லை நீங்கள் ஜெயம் பெற்றவர்கள். இன்றும் வெற்றியின் நாள்.



என் நேச தகப்பனே உங்கள் திருக்குமாரன் மரணத்தை ஜெயம் கொண்டவராக உயிர்த்தெழுந்து சாத்தானின் சகல அதிகாரங்களையும் நிர்மூலப்படுத்தினவரே இன்றைய நாளிலும் சாத்தானுடைய கிரியைகளை அழித்து எம்மை காத்தருளும் இயேசுவின் நாத்தில் ஆமென்.

---

மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார். எபிரெயர் 7:25

ஜீவ மன்னா

மே 04

சனி

## வாக்கு மாறா சத்தியத்தின் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு


1 பேதுரு 03 - 04

**"நீர் உமது அடியேனுக்குக் கொடுத்த உமது வாக்கின்படி, உமது கிருபை என்னைத் தேற்றுவதாக."** (சங்கீதம் 119:76)

வெளியே கொண்டு செல்லவில்லை இதனால் அச்சபையிலே சிறைப்பட்டு வெளியே வர முடியாதபடி இருக்கவில்லை தேவனுடைய அன்புச் சிறையிலே அடைக்கப்பட்டிருந்தேன் அவரது அன்புக் கட்டளை மீறி என்னால் அன்பார்ந்த என் தேவப்பிள்ளைகளே எங்கள் ஜீவாதிபதி இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினால் இன்றைய நாளை கிருபையின் நாளாகும்படி வாழ்த்துகிறேன். சர்வவல்லவரின் அடைக்கலத்தில் தங்கும் பாக்கியத்தை பெற்றுக் கொண்டவர்கள் பேறு பெற்றவர்கள். எம்மை உண்டாக்கினவரைக் குறித்து அறிந்து சேவிக்க அறிந்த நாங்கள் அதிர்ஷ்டசாலிகள். அது மாத்திரமல்ல இயேசுக்கிறிஸ்து மாத்திரமே மெய் தெய்வம் என ஏற்றுக்கொண்டு அவரை நமஸ்கரிக்கும் யாவரும் பாக்கியவான்களே.

அன்பார்ந்தவர்களே மேலே தரப்பட்ட வேத வசனம் சங்கீதம் 119:76 சொல்கிறது தேவன் சொன்ன வார்த்தையை மாற்றாதவர் நான் விசுவாசிக்கிறேன் ஏனென்றால் எனது தாய் சபையில் பதினெட்டு வருடக்காலங்களாக உடன் ஊழியக்காரனாக ஊழியம் செய்தேன். ஊழியத்தின் காலங்களில் அநேக உபத்திரவங்கள், பிரச்சினைகள் போராட்டங்கள் சோதனைகள் இப்படியாக அநேக சவால்களுக்கு முகங் கொடுக்க நேர்ந்தது. இதன் நிமித்தமாய் நான் தேவ பாதத்தில் ஜெபித்தேன் இங்கிருந்து என்னை வெளியே கொண்டு செல்லும்படியாக ஆனால் தேவன் என்னை சுயவிருப்பத்தின்படி எனது உள்ளம் இடமளிக்கவில்லை. தாயின் கருவில் உருவாக்கி தெரிந்துக்கொண்டு இவ் மண்ணுலகில் பிறந்தவுடனே பெயர்ச் சொல்லி அழைத்த தேவன் விசவாசிக்கிறவர்களுக்கு பெரிய காரியங்களைச் செய்யும் விஷேசித்த கிருபையுள்ளவர் என்பதை நான் அறிந்திருக்கிறேன். எப்படியோ என் ஊழியக்காலம் பதினெட்டு வருடங்கள் கடந்தது. நான எந்நேரமும் என் தேவனையே விசுவாசித்து அவரையே நோக்கிப் பார்த்து காத்திருந்தேன்.

என் அன்புக்குரிய தேவனுடையவர்களே கம்பளை என்னும் மலைப் பிரதேசத்தில் வசித்த நான் தொழில் காரணமாக கொழும்பு பிரதேசத்திற்கு வர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. கொழும்புக்கு நகரத்திற்கு வந்த எனக்கு சொந்த வசிப்பிடம் இருக்கவில்லை வாடகை வீட்டிலே வசித்து வந்தோம். கொழும்பிலுள்ள ரமாடா என்னும் உல்லாசப்பிரயாணிகள் வந்து தங்கிச் செல்லும் விடுதியில் ( ஹோட்டலில் ) வாகன சாரதியாக தொழில் புரிந்தேன்.எனக்கு தேவனிடமிருந்து ஊழிய அழைப்பு கிடைத்தவுடன் தேவனுக்கு கீழ்ப்படிந்து தொழிலை இராஜினாமா செய்து விட்டு தேவ ஊழியத்திற்கு என்னை அர்ப்பணித்து முழு நேர ஊழியக்காரனாக ஊழியம் செய்தேன்.நாம் இருந்த வாடகை வீடு சொந்தமாக விற்பனைக்கு வந்தபோது அந்த வீட்டை வாங்குவதற்கு என் தாய் சபை தலைமைப்போதகர் உதவி செய்தார் பதினெட்டு வருடங்கள் பின் என் தாய் சபையை விட்டு வெளியேறிய போது எனக்கு சொநதமான வீட்டில் வாழ தேவன் கிருபை கூர்ந்தார். சில வருடங்கள் கடந்த பின் நாமிருக்கும் வீட்டின் பெறுமதி அதிகரித்தபடியால் அதை அதிக விலைக்கு விற்று வேறு வீட்டை வாங்கினோம். அதை எமது வசதி தேவைக்கேற்ப அமைப்பதற்கு பணம் தேவைப்பட்டது இதனிமித்தம் நான் வெளிநாடுச் சென்று பணம் சம்பாதிக்க முயற்சிசெய்தேன். ஆனாலும் தேவனுடைய சித்தம் அதுவல்ல தேவனுடைய கட்டளையின் பிரகாரம் நீ வெளி நாடு செல்ல வேண்டாம் வெளிநாட்டில் போய் உழைக்கும் சகல சம்பத்துகளையும் நான் இலங்கையிலே உனக்கு ஆசீர்வதிப்பேன் என்று என்னோடு பேசினார் நான் தேவனுக்கு கீழ்ப்படிந்தேன். தேவன் என்னை உயர்த்தி ஆசீர்வதித்தது போல உங்களையும் ஆசீர்வதிப்பார். இன்றைய நாள் ஆசீர்வாதமாக நாளாக அமையட்டும்.



வாக்கு மாறாத தகப்பனே, வேதத்தில் எமக்கு தருவதாக அநேக பொருத்தனையான வாக்குத்தத்தங்கள் அருளப்பட்டிருக்கிறதே அவை யாவற்றையும் எனக்கும் என் குடும்பத்தாருக்கும் கொடுத்து ஆசீர்வதிக்க வேண்டும் என ஜீவனுள்ள இயேசுவின் நாமத்தில் ஜெபம் கேட்கிறேன் ஆமென்.

---

கேடுபாடுகள் அதின் நடுவில் இருக்கிறது;
கொடுமையும் கபடும் அதின் வீதியை விட்டு விலகிப்போகிறதில்லை. ஏசாயா 55:11

ஜீவ மன்னா

மே 05

ஞாயிறு

## இருதயத்தின் இரகசியங்களை அறியும் எம் ஆத்தும நேசர் !

இன்றைய வேதவாசிப்பு
1 பேதுரு 05
2 பேதுரு 01

**“அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார். ”** (மத்தேயு 6:4)

அநாதி சிநேகத்தால் சதாகாலங்களிலும் ஜீவிக்கின்ற இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினால் இந்த மலரும் காலைப் பொழுதிலே இன்றும ஒரு இனிய நாளாக அமையும்படி வாழ்த்துகிறேன் எனக்கருமையான தேவப் பிள்ளைகளே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவரும் அதை ஆளுகை செய்பவரும் கர்ப்பப்பையில் உருவாக்கி இப் பரந்த உலகில் ஜனனமடைய செய்தவருமான கர்த்தாதி கர்த்தர் கர்த்தருடைய ஏகபுத்திரனை எமக்கு தந்தருளி எம்மை தம்மிடமாய்ச் அழைத்துக்கொண்டவருமான சர்வ வல்லமை பொருந்திய எமது விண்ணக தந்தையால் நாம் பேறுபெற்றவர்களானோம்.

தேவனானவர் தம்மை எமக்கு வெளிப்புடுத்தியவர் அல்ல ஆனால் தனது மேய்ப்பர்களோடு தம் ஜனங்களுக்கு தம் குரல் மூலம் தம்மை வெளிப்படுத்தியுள்ளார். அவர் மேகங்களுக்கூடாக பேசுகிறார் நெருப்பிற்கூடாக பேசுகிறார், அநேக தடவைகள் அமைதியான சூழலில் மெல்லிய சத்தத்தைக் கேட்கச் செய்கிறார் இவ்வண்ணமாக எம் கர்த்தர் பரலோகத்தேவன் படைப்பின் காரணர் தாம் தெரிந்துக்கொண்ட ஜனங்கள் மத்தியில் பேசும்போது அவருடைய வல்லமையின் முன்பாய் நிற்க இயலாதபடி நடுங்கிப்போனார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் தம்மை விட்டு விலகிப் போகும்படி பணிந்துக் கேட்டுக் கொண்டார்கள் ஏனெனில் அவரது மகிமைக்கு முன்பாக வல்லமைக்கு முன்பாக அவர்களால் நிற்கமுடியவில்லை. கர்த்தர் சர்வபராக்கிரமத்தின் தேவனானபடியால் அவரின் குரலைக் கேட்டே ஜனங்கள் நடுநடுங்கினார்கள்.

அன்பு தேவப் பிள்ளைகளே நாம் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவாகளாக இருக்கிறோம் ஏனெனில் ஆவியானவருக்கூடாக தேவன் எம்மோடு உறவாடுகிறார். இந்த பாக்கியம் எம்மைத் தேடி வந்தது அவரின் ஏகபுத்திரன் இயேசுக்கிறிஸ்துவின் மூலமாய் எம்மை தமது சொந்த புத்திரராக ஏற்றுக்கொண்ட கிருபையினால். அவரது நேரடி தரிசனத்தை நாம் காணாவிட்டாலும் ஆவியானவர் எம்மோடிருக்கிறபடியால் நாம் எப்போதும் அவருக்கு முன்பாய் நிற்கிறோம். அவர் எம்மை பார்த்துக்கொண்டிருக்கிறார். அவர் அறியாமல் எம்மால் ஒன்றும் செய்ய முடியாது ஆகையால் நாம் மிக ஜாக்கிரதாய் எல்லா காரியங்களிலும் உண்மையோடு செயல்பட வேண்டும். ஏம் செயல் சிந்தனைகள் யாவும் அவர் கண்களுக்கு முன்பாய் வெளியரங்கமாய் இருக்கிறபடியால் அவர் கண்களுக்கு முன்பாய் வெளியரங்கமாய் இருக்கிறபடியால் சாத்தானுடைய கண்ணிகளில் அகப்பட்டு விடாமல் அவனை எதிர்த்து நிற்கவேண்டும் ஜெபத்தின் மூலமாய் தேவ பெலன் பெற்று சகல காரியங்களில் உத்தமாய் நடந்து தேவனுடைய பார்வையில் பரிசுத்தமானவர்களாக இருக்கக்கடவோம் தேவன் நம்மோடிருக்கிறார். மகிழ்ச்சியின் நாள்.

என் தேவனே பரலோகத்திலிருந்து செயல்படுபவரே எப்போதும் என்னை நோக்கிப் பார்த்துக் கொண்டிருப்பவரே. எம் இரகசியங்களைக் கூட உம் கண்கள் காண்கிறதே என் சகல கிரியைகளிலும் உமக்கு உகந்தவனாக ஜீவிக்க ஆவியினால் ஆசீர்வதித்து வழி நடத்துமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

---

ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார். பிரசங்கி 12:14

ஜீவ மன்னா

மே 06

திங்கள்

# உங்களுடைய உபத்திரவங்களுக்கு மத்தியில் மனமகிழ்ச்சியை காணச் செய்யும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

2 பேதுரு


02 - 03

**"ராஜா கெபியின் கிட்டவந்தபோது, துயரசத்தமாய்த் தானியேலைக் கூப்பிட்டு: தானியேலே, ஜீவனுள்ள தேவனுடைய தாசனே, நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைச் சிங்கங்களுக்குத் தப்புவிக்க வல்லவராயிருந்தாரா என்று தானியேலைக் கேட்டான்."** (தானியேல் 6:20)

ஒப்பற்ற ஈடு இணையற்ற இயேசுக்கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தைக் கொண்டு இந்த புதிய நாளின் ஆரம்ப வேளையில் உங்களை ஆசீர்வதித்து வாழ்த்துகிறேன். நிகரற்ற ஜீவனுள்ள தேவனை அறிந்த நாங்கள் பாக்கியவான்கள். இந்த பூமிக்குரிய ஞானம் கல்வி இவைகளின் மூலம் தேவனை அறிய முடியாது. ஏனெனில் தேவனின் ஞானத்தின்படி உலகததாரின் சொந்த ஞானத்தினால் கடவுளைக் குறித்து அறிந்துக் கொள்ள முடியாது. பிரசங்கங்களின் மூடத்தனத்தைக் கொண்டு விசுவாசிக்கிறவர்களை இரட்சிக்க மன மகிழ்ச்சியின் தேவனாயிருக்கிறார் என வேதம் சொல்லுகிறது.. தேவனைக் குறித்து அறிந்து அவரை விசுவாசித்து வழிப்படும் நாங்கள் அதிர்ஷ்டசாலிகள்.

தேவனுடையவர்களே மேலே தரப்பட்டிருக்கிற வேத வசனத்தின் தானியேல் 6:20 கூறுகிறது தானியேலை சிங்கக் கெபியில் போட்டது சிங்கங்களுக்கு இரையாகும்படி போடப்பட்டான் என்று. ஆனால் தரியு ராஜாவோ இராஜ்ஜியம் முழுமைக்கும் தானியேலை அதிகாரியாக ஏற்படுத்தும்படி நினைத்தான். ஆனால் அவன் மீது பொறாமைக் கொண்ட பிரதானிகளும் தேசாதிபதிகளும் அவனைக் குற்றப்படுத்தும் முகமாக யோசனைப் பண்ணி ராஜாவின் உள்ளத்தை வேறுப்படுத்தி தானியேல் மீது குற்றஞ் சுமத்தி அவனை சிங்கக்கெபியில் போட்டார்கள் ஆயினும் தரியு ராஜாவின் உள்ளத்தில் ஏற்பட்ட வேதனையின் நிமித்தம் உறங்காது, உணவு உண்ணாது துக்கமடைந்து கலங்கி மனமகிழ்ச்சியின்றி விடியும் வரை காத்திருந்து. தானியேலுக்கு என்ன நடந்தது என அறியும்படி கெபியை நோக்கிச் சென்று துயரசத்தமாய் தானியேலை கூப்பிட்டான் என வேதம் கூறுகிறது. அவன் சிங்கங்களுக்கு இரையாகாமல் ஜீவனுள்ள தேவன் அவனைக் காத்துக் கொண்டதை தானியேலின் பதிலுக்கூடாக அறிந்து மகிழ்ச்சியடைந்து சிங்கக் கெபியில் இருந்து தூக்கிவிடச் சொன்னான். சிங்கங்கள் சேதப்படுத்தாதபடி தேவனின் சிங்கங்களின் வாயைக் கட்டி போட்டார்.

தேவ பிள்ளைகளே அதன் பின்பு தானியேல் தேசத்திலே உயர்த்தப்பட்டான். தரியுவின் ராஜயபார காலத்திலும், பெர்சியானாகிய கோரேசுடைய ராஜ்யபார காலத்திலும் தானியேலின் காரியங்கள் ஜெயமாயிருந்து உயர்த்தப்பட்டான் என்று வேத வசனம் கூறுகிறது. உங்களுடைய வாழ்க்கையிலும் இப்படியான உபத்திரவங்கள் ஆத்மீக பயணத்தில் முன் செல்கிற வேளையில் தேவனுடைய சித்தம் என் வாழ்வில் என் நிறைவேறவில்லையே என கவலைப்படாதிருங்கள். தானியலோடிருந்து தானியேலை காத்த தேவன் உங்கள் ஆபத்து வேளைகளில் உங்களையும் காக்க வல்லவராயிருக்கிறார். சிங்கங்களுக்கு இரையாகப் போட்ட தானியேலை உயிரோடு வரச் செய்த தேவன் காருளில் பேரொளி தோன்றச் செய்கிறவர். உங்கள் வாழ்க்கையிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தி விடுதலையைக் கொடுத்து ஆசீர்வதிக்க தேவன் உங்களோடிருக்கிறார். இன்றைய நாள் நன்மையான நாள்.



*மிகவும் காருண்யமுள்ளவரான என் அன்புக் கர்த்தாவே உங்கள் கிருபையால் எம் ஆபத்து வேளைகளில் எம்மைக் பாதுகாத்தருளும் எம்மை உயர்த்தி ஆசீர்வதித்து வழி நடத்தும் தெய்வமே என்னை பாதுகாத்து ஆசீர்வதித்தருளும்.-ஆமென்-*

---

மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள். 2 கொரிந்தியர் 4:17,18

ஜீவ மன்னா

மே 07

செவ்வாய்

# எம்மைத் தெரிந்துக் கொண்ட தேவன் விசுவாசத்தினால் ஐஸ்வரியவான்களாக மாற்றுவார் !

இன்றைய வேதவாசிப்பு


1 யோவான் 01 - 02

**“என் பிரியமான சகோதரரே, கேளுங்கள்; தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம்பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்துகொள்ளவில்லையா?”** (யாக்கோபு 2:5)

அன்புக்குரிய அருமையான தேவனுடைய பிள்ளைகளே இந்தப் புதிதான விடியற் பொழுதிலே உயிருள்ள இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினால் நன்மைகளினால் நிரப்பும்படி ஆசீர்வதிக்கிறேன். ஆவிக்குரிய பிள்ளைகளாக ஜீவிக்கிற நீங்கள் யாவரும் அதிர்ஷ்டமிக்கவர்களாக இருக்கிறீர்கள். ஆயினும் உங்களின் அநேகர் வாழவின் நிலவரத்தைக் கொண்டும் வருமான குறைவுகளை குறித்தும் பொருளாதார பிரச்சினைகளை குறித்தும் யோசனைகளின் நிமித்தம் மனக் கலக்கமுள்ளவர்களாக இருக்கிறீர்கள். எந்நேரமும் இவைகளை குறித்து நினைத்து எப்படியாவது பணம் சம்பாதித்து சமூகத்தில் ஒரு முக்கிய இடத்தை வகித்து எல்லோரிலும் சிறந்தவர்களாக இருக்க முயற்சி செய்கிறார்கள். ஆனால் அவர்கள் எடுக்கும் சகல தீர்மானங்களும் செயல்களும் தோல்வியடையும் போது தேவ அன்பினால் குறைவுப்பட்டவர்களாய் விசுவாசத்தில் சோர்வுற்று தேவனை விட்டு விலகிப் போகிறவர்களாக இருக்கிறார்கள்.

இன்றைய நாளிதலின் ஆரம்ப வேத வசனம் யாக்கோபு 2:5 வெளிப்படுத்துகிறது தரித்திரரை விசுவாசத்தில் ஐஸ்வரியவான்களாக மாற்றவும் தம்மிடத்தில் அன்புக் கூறுகிறவர்கள் பரலோக இராஜ்ஜியத்தின் சுதந்திரவாளிகளாக மாற்றும்படி தேவன் எங்களை தெரிந்துக் கொண்டார் என்பதால் நீங்கள் இன்றைய நாளிலும் அனுதின தேவைகளுக்காக மிகவும் சிரமத்துடன் பாடுகளை அனுபவித்துக் கொண்டு அநேக கஷ்டங்களுக்கு மத்தியில் உங்களுடைய வாழ்க்கை பயணத்தை நடத்துபவராக இருக்கலாம். ஆனாலும் கலங்காதிருங்கள் தேவ வசனத்தின்படி விசுவாசத்தினால் ஐஸ்வரியனாகவும் அவரில் அன்புக் கூறும் உங்களை பரலோக உரிமையுள்ளவராக மாற்ற அழைத்தவர் உண்மையுள்ளவராக இருக்கிறார் என்பதை அறிந்து நீங்கள் தைரியமாயிருங்கள். உலக ஆஸ்திகள் மூலம் பெற்றுக் கொள்ள தேவனுடைய புத்திர சுவிகாரத்தை கிருபையாக பெற்றுக்கொண்டு பரலோக இராஜ்ஜியத்தை சுதந்தரித்துக் கொள்ள உரிமையைப் பெற்றுக் கொண்ட நீங்கள் பாக்கியவான்கள். உலகத்தார் மத்தியில் நீங்கள் ஆசீரவதிக்கப்பட்டவர்கள். சகல மனிதர்களிலும் நீங்கள் பேறு பெற்றவர்கள் உங்கள் வாழ்வில் ஏற்படும் சகல வித பணக் பற்றாக் குறையின் நிமித்தம் பொருளாதார வீழ்ச்சியினின் போது உலக மனிதர்களிடம் கடன் கேட்டு உதவிக் கரம் நாடாமல் அதிர்ஷ்ட சீட்டுகள் போன்ற உலக ஜனங்களின் கிரியைகளை பின் பற்றாமல் இவைகளை நம்பி நடக்காதபடி உங்களை உருவாக்கி உயிரடையச் செய்து ஆளுகை செய்கிறதான பரலோக தகப்பனை விசுவாசித்து அவரிடமிருந்து வரும் ஐஸ்வரியத்திற்காக காத்திருக்கும் நீங்கள் இப்போதே விசுவாசத்தினால் நீதிமான்களாக தேவனுக்க உகந்தவர்களாக விசுவாசத்தில் பெலனடைந்து இருப்பதை உணர்கிறீர்களா?

தேவப் பிள்ளைகளே, இன்னுமாய் தேவனை அன்மித்து கிட்டிச் சேர்ந்துக் கொள்ளுங்கள் மத்தேயு 6:33ல் தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்போது இவைகளெல்லாம் உங்களுக்கு கூடக் கொடுக்கப்படும் என இயேசுக்கிறிஸ்து எமக்கு வாக்கு கொடுத்திருககிறார். எரேமியா 29:11ன்படி தேவன் எம்மைக் குறித்து உயர்வான திட்டத்தை நோக்கத்தை வைத்திருக்கிறா. இவற்றை நாங்கள் விசுவாசித்து கருத்தில் கொண்டு தேவனுடைய பாதத்தில் அனுதினமும் இடைவிடாது ஜெபங்களை ஏறெடுப்போமென்றால் அவருடைய ஆசீர்வாதம் உங்களுக்கு ஐஸ்வரியத்தைக் கொண்டு வரும் இன்றைய நாள் ஆசீர்வாதத்தின் நாள்.



எனது அன்புத் தகப்பனே என்னைத் தெரிந்தக் கொண்டவரே தரித்திரனான என்னை விசுவாச்தில் ஐஸ்வரியத்தை பெற்றக்கொள்ள என்னை அழைத்தவரே என்னை விசுவாசத்தில் பெலப்படுத்தி ஆசீர்வதியுங்கள்.~ஆமென்~

விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்
ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும்,
அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்.
எபிரெயர் 11:6

ஜீவ மன்னா

மே 08

புதன்

# மிகப் பரந்த இருதயம் கொண்ட பரமன் இயேசுக்கிறிஸ்து !

இன்றைய வேதவாசிப்பு


1 யோவான் 03 - 04

**"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்."** (யோவான் 1:12)

அன்பார்ந்த என் தேவப்பிள்ளைளே, காலையிலே தமது கிருபையால் எம்மை திருப்தியாக்கும் வல்லவருடைய பரிசுத்த நாமத்தைக் கொண்டு இன்றைய நாளில் உங்களைவ வாழ்த்துவது மட்டுமல்லாது. நன்மைகள் வந்தடையும்படி இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தால் ஆசீர்வதிக்கிறேன். விண்ணையும் மண்ணையும் உருவாக்கியவரும் சகல ஜாதிகளின் மத்தியில் தம்மைப் பற்றி அறிந்துக் கொண்டு சர்வ வல்லவருடைய ஏக புத்திரன் இயேசுக்கிறிஸ்துவுக் கூடாக அவரது இராஜ்ஜியத்தில் அவருடைய சொந்த பிள்ளைகளாகும்படி உரிமையைப் பெற்றுக் கொள்ளும்படி எம்மை அவர் தெரிந்துக் கொண்டபடியால் நாம் பாக்கியவான்களாக இருக்கிறோம்.

தேவனுடைய பிள்ளைகளே, இன்றைய தினத்தின் தேவ வசனம் எமக்கு உணர்த்தும் காரியம் நாங்கள் எத்தனைப் பேராகிலும் எம் மீட்பர் இயேசுக்கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவரின் நாமத்தை விசுவாசிக்கும் போது நாங்கள் அவருடைய பிள்ளைகளாகும்படி வல்லமையை கொடுக்கிறார். ஒரு குறிப்பிட்ட அளவான ஜனங்களை மாத்திரமல்ல உலகத்தின் 600 கோடிக்கு மேற்பட்ட ஜனங்களையும் தமது உரிமையுள்ள சொந்த ஜனங்களாக மாற்ற விரும்புகிறார். அதன் நிமித்தமாகவே தம் இரத்தத்தைச் சிந்தினார். அவருடைய பரந்த இருதயம் சகலரையும் நேசிக்கிறது அவர் நாமத்தை அறிந்து அவரை விசுவாசித்து அவரை ஏற்றுக் கொண்டு அவருடைய பாதத்தில் தஞ்சமடையும் யாவரையும் தம் புத்திரசுவிகாரத்தைக் கொண்டு பாவசாபங்கள் நோயின் கட்டுகள் இன்னும் சகல உபத்திரவங்களையும் நீக்கி வழிநடத்த வல்லமையும் அனைவரையும் ஏற்ற அருள் செய்யும் விசாலமான இருதயமும் கொண்டவர் எம் ஆண்டவர்.

சகல ஜனங்களின் தேவன் மாம்சமான யாவரின் தெய்வமானார் இவரை விசுவாசித்து ஏற்றுக்கொண்டால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக மாறுவோம் அல்லவா. அது உண்மையிலே மிக அருமையான காரியமல்லவா? எமது பரலோகத் தகப்பன் மனிதனுடைய தராதரத்தை பார்க்கிறவர் அல்ல எல்லோரையும் சிறுமையாக எண்ணுவதில்லை புறம்பே தள்ளுவதில்லை யாவரும் அவர் முன்பதாக சமனானவர்களே. யாவரையும் நேசிக்கும் அவருடைய இருதயம் எவ்வளவு விசாலமானதாகும் இருக்கும் சகலரையும் தம் பிள்ளைகளாக கருதும் அவருடைய உள்ளத்தின் அன்பை அதன் விசாலத்தை எண்ணிப்பார்க்க முடியாது. அவரின் அனபு அளப்பெரியது.அவரது உள்ளம் பரந்தது. அவர் ஒரு போதும் எம்மை கைவிடாதவர். நீங்கள் ஒவ்வொரு நாளும் அவருடைய ஆதி அன்பை புதுப்பித்துக் கொண்டு அவரை நெருங்கிச் சேர்ந்து வெற்றியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.இன்றைய நாள் ஜெயத்தின் நாள்.



அன்பான தேவனே உங்கள் விசாலமான இருதயத்திற்காக நன்றி எங்களை விசாலத்தில் வைத்தவரே ஸ்தோத்திரம். என்னை உங்களது ஆதி அன்பினால் என்னை கிட்டிச் சேர்த்து உங்கள் அன்பினால் நிரப்பி வழி நடத்தும்படியாய் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

---

பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப்பாருங்கள்;
அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்; நானே தேவன், வேறொருவரும் இல்லை. ஏசாயா 45:22

ஜீவ மன்னா
மே 09
வியாழன்

# நீங்கள் விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காணலாம் !


இன்றைய வேதவாசிப்பு
1 யோவான் 05
2 யோவான் 01

**"அவர் வீட்டிற்கு வந்தபின்பு, அந்தக் குருடர் அவரிடத்தில் வந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா என்று கேட்டார். அதற்கு அவர்கள்: ஆம் விசுவாசிக்கிறோம், ஆண்டவரே! என்றார்கள்."** (மத்தேயு 9:28)

தேவனுக்குப் பிரியமான தேவனுடைய பிள்ளைகளே, பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின், நாமத்தினால் உங்களுக்கு கிருபையும், சமாதானமும் உண்டாவதாக என இந்தக் காலைப் பொழுதினிலே வாழ்த்துகிறேன். கர்த்தரையே தங்களுக்கு தெய்வாமாகக் கொண்டு அவரை விசுவாசிக்கும் அவரின் சொந்த பிள்ளைகளாகத் தெரிந்துக் கொண்ட நீங்களும் நானும் பெரும் பாக்கியம் பெற்றவர்களாக இருக்கிறோம். நீங்கள் அவரையே தெய்வாமாகக் கொண்டு அவரை விசுவாசித்து ஓடுகிறவர்களாக இருக்கிறபடியால் லௌகீக ஆசீர்வாதங்களையும் ஆத்மீக ஆசீர்வாதங்களையும் உங்கள் மீது கடந்து வரச் செய்து ஆசீர்வாதங்களை ஊற்றி நிரம்பி வழியும் பாத்திரமாக தேவன் மாற்றுவார்.

தேவ பிள்ளைகளே தேவனை விசுவாசித்து நடந்தால் அவர் மகிமையைக் காணலாம். ஒரு நாள் இயேசுக்கிறிஸ்து தன் சீஷர்களோடு நடந்து செல்லும் போது இரண்டு குருடர் அவர் பின்னே சென்று தாவீதின் குமாரனே எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள். அவர் வீட்டிற்கு வந்தபின்பு அந்தக் குருடர்கள் அவரிடத்தில் வந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா? என்று கேட்டார் அதற்கு அவர்கள் ஆம் விசுவாசிக்கிறோம். ஆண்டவரே எனறார்கள். அப்பொழுது அவர்களுடைய கண்களை அவர் தொட்டு உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது என்றார் உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது. குருடர்கள் கண்பார்வையடைந்தார்கள்.என வேதத்தில் எழுதப்பட்டுள்ளது. அன்று அற்புதம் செய்த தேவன் இன்றும் எம் மத்தியில் அவ்வண்ணமாகவே இருக்கிறார். அந்தக் குருடாகளைப் பாக்கிலும் நீங்கள் அதிர்ஷ்டசாலிகள். ஏனெனில் அவர்கள் கண்களால் காணாதபடி மனிதர்கள் இயேசுக்கிறிஸ்து செய்யும் அற்புதங்களை கேள்விப் பட்டு விசுவாசித்து பார்வையைப் பெற்றுக்கொண்டார்கள்.

தேவ பிள்ளைகளே நீங்கள் அவர்களைப் போல் கேட்டறிந்து அல்ல கண்டு விசுவாசிக்கிறவர்களாக இருக்கிறீர்கள். அவரின் நன்மையான செய்கைகளை நீங்கள் கண்களினால் கண்டு அவரை விசுவாசிக்கிறவர்களாக இருக்கிறீர்கள். உங்கள் விசுவாசம் எவ்வளவு பெரியது உங்கள் விசுவாசத்தின் பலனாக தேவன் உங்கள் வாழ்விலும் பெரிய காரியங்களை, வல்லமையான காரியங்களை அற்புதக்காரியங்களைச் செய்ய வல்லவராயிருக்கிறார். உங்கள் எதிராளியான சாத்தானுக்கு உங்கள் விசுவாசத்தை சீர்குலைக்க இடம் கொடாதபடி விசுவாசித்து தேவனுடைய மகிமையை கண்டுணருங்கள். உங்கள் விசுவாசத்தின்படி ஆசீர்வதிக்கும் தேவன் உங்களையும் ஆசீர்வதிக்க வல்லவர். இன்றும் உங்களுக்கு வெற்றியின் நாள்.



என் அன்புத் தேவனே. அற்புதத்தின் தேவன் இயேசுக்கிறிஸ்தவுக்கு ஸதோத்திரம். தேவன் என்னை ஏற்றுக்கொண்டபடியால். என் வாழ்க்கை மாறுதலைடைந்தூ உங்களை விசுவாசித்தபடியால் உஙகள் மகிமையைக்காணும் பாக்கியம் கிடைத்தது மேனமேலும் என் விசுவாசம் வளர கிருபை கூறும்படியாக ஜெபிக்கிறேன் ஆமென்

கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து,
கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். எரேமியா 17:7

ஜீவ மன்னா
மே 10
வெள்ளி

# இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள்!


இன்றைய வேதவாசிப்பு
3 யோவான் 01
யூதா 01

**"வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள்; இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்."** (மத்தேயு 10:8)

அன்பார்ந்த தேவனுடய பிள்ளைகளே, நிகரில்லா தேவன் இயேசு சுவாமியின் நாமத்தினால் உங்களுக்கு சுப நாளாகட்டும் என வாழ்த்துகிறேன். நித்திய இராஜாவான எமது இரட்சகர் எம்மை தம சுவீகாரப் பிள்ளைகளாய் மாறும் பாக்கியத்தை எமக்களித்தபடியால் நாங்கள் அவரையே எம் மீட்பரின். கன்மலையாக தெரிந்துக் கொண்டபடியால் நாங்கள் மிக பாக்கியவான்கள். சகல ஜனங்கள் மத்தியிலும் எமக்கு இந்த வரப்பிரசாதம் கிடைக்கப் பெற்றது தேவனுடைய மா தயவான கிருபையே.

அருமையான தேவ ஜனங்களே, இயேசு சுவாமி இம் மண்ணுலகில் ஜீவித்த ஊழியக் காலங்களிலே தனக்கு சீடர்களாக பன்னிரண்டு சீஷர்களை தெரிந்துக் கொண்டார். அவர்களுக்கு அநேக காரியங்களை கற்பித்து அசுத்த ஆவிகளை மனித சரீரங்கலிருந்து விரட்டவும். எல்லாவிதமான வியாதிகளை குணமாக்கு வல்லமையையும் கொடுத்தார். அதன் பிறகு அவர்களை கிராமங்களுக்கும், பட்டணங்களுக்கும் அனுப்பி அவர்கள் பன்னிரண்டு சீஷர்களுக்கும் பரலோக இராஜ்ஜியம் சமீபமாயிருக்கிறது என சுவிசேஷம் அறிவிக்கும்படி கட்டளையிட்டார். அது மாத்திரமல்லாது பிசாசுகளை துரத்தவும் பிணியாளிகளைக் குணமாக்கவும் குஷ்டரோகிகளை சொஸ்தமாக்கி சுத்தமாக்கவும் மரித்தவர்களை உயிர்ப்பிக்கவும் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்து நீங்கள் இலவசமாகப் பெற்றுக் கொண்டவைகளை மற்றவர்களுக்கு இலவசமாக கொடுங்கள். எனக் கூறினார். ஆகையால் அவரால் தெரிந்துக் கொள்ளப்பட்ட நீங்களும் நானும் பாக்கியவான்களே. ஆவரை ஏற்றுக்கொண்டு விசுவாச பாதையில் உறுதியாக நடக்கிறவர்கள் அவரில் நிலை நிற்கிறவர்கள். பரிசுத்த ஜீவியம் ஜெப வாழ்க்கையில் தரித்திருப்பவர்கள். ஆத்துமா பாரத்தோடு அழிந்து போகும் ஆத்துமாக்களுக்காக கண்ணீரோடு ஜெபிக்கிற நீங்களும் அவரின் ஈவுகளை இலவசமாக பெற்றுக் கொண்டவர்களாக இருக்கிறீர்கள்.

தேவ பிள்ளைகளே இன்றைய நாளிலும் இந்தச் செய்தியை வாசிக்கும் நீங்கள் இயேசுவின் வல்லமைக் கூடாக இலவசமாக சுகம், சமாதானம், மகிழ்ச்சி விடுதலையைப் பெற்றுக் கொண்டவராக இருக்கலாம். அல்லது இன்று வியாதிகளோடும், பிரச்சினைகளோடும், கவலைக் கண்ணீரோடு தவிப்பவராக இருக்கலாம். ஆயினும் அசுத்த ஆவிகளை விரட்டவும் வியாதிகளை குணப்படுத்தவும் சீஷர்களுக்கு வல்லமையை கொடுத்த இயேசு தெய்வம் இன்றும் உங்கள் எதிராளியான சாத்தான் உங்களுக்கு விரோதமாக எத்தனிக்கும் தடைகள் பாவங்கள், வியாதிகள், சோதனைகள் எல்லாம் அவன் நீங்கள் பெற்றுக்கொண்ட இரட்சிப்பின் மூலம் சத்துருவானவன் உங்கள் மேல் கோபம் கொண்டவானாக உங்கள் இரட்சிப்பை இல்லாமல் செய்வதற்கு அநேக தந்திரமான உபாயங்களை மேற்கொள்வான். அதாவது வாழ்க்கையில் தோல்விகளைச் சந்திக்கச் செய்து வியாதிகளை ஏற்படுத்தி குடும்பத்திலே குழப்பங்களை உண்டுபன்னி அநேக உபத்திரவங்களுக் கூடாக உங்களை கலங்கப் பன்னுவான். ஆயினும் அன்று உங்களை அழைத்து தொட்டு விடுதலையைக் கொடுத்த தேவன் இன்றும் உங்களோடிருக்கிறார் பயப்படாதிருங்கள் சத்துருவின் முழு பெலத்தையும் மேற்கொள்ளும் அதிகாரத்தையும் நம்முடைய ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து நமக்க் கொடுத்திருக்கிறார். ஆகவே விசுவாசத்தோடு ஜெபத்திலே தரித்திருந்து ஜெயம் பெறுங்கள். இன்று ஜெயத்தின் நாள்.



என் அன்புத் தகப்பனே சர்வவல்லமையுள்ளவரே இயேசுவின் நாமத்தினால் இலவசமான சுகத்தை, விடுதலையை கொடுத்தவரே. இன்றும் அவ்வண்ணமாக செயல்பட வல்லவரே என்னையும் அசீர்வதிக்கும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபம் கேட்கிறோம் ஆமென்.

---

நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி,
சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது;
அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை. யாக்கோபு 1:17

ஜீவ மன்னா

மே 11

சனி

# உங்களுக்கு அளவில்லாமல் ஒத்தாசை செய்யும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு


வெளி. 01 - 02

**"அப்பொழுது ராஜா என்னைப் பார்த்து: நீ துக்கமுகமாயிருக்கிறது என்ன? உனக்கு வியாதியில்லையே, இது மனதின் துக்கமே ஒழிய வேறொன்றும் அல்ல என்றார்; அப்பொழுது நான் மிகவும் பயந்து,"** (நெகேமியா 2:2)

அன்பு தேவ பிள்ளைகளே ஜீவனுள்ள இயேசுக்கிறிஸ்த்துவின் நாமத்தினால் இன்றைய நாளிலும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன் மாமசமான யாவருக்கும் கர்த்தர் நானே என்னால் கூடாத காரியம் ஒன்றுண்டோ? என்று கூறிய ஒரே தேவன் எமது சர்வ வல்லமையுள்ள தேவன் ஆகையால் அவர் மீது விசுவாசம் கொண்டுள்ள நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். உங்கள் ஆவிக்குரியதும் சரீரப்பிரகாரமான எல்லாக் காரியங்களும் கூட காணப்படும் எல்லா பிரச்சினைகளும் உங்களுக்கு விரைவாகப் பதிலைப் பெற்று தர அவர் வல்லமையுள்ள தேவன் ஆபிரகாமை பூமியிலே எல்லா ஜாதிகளைப் பார்க்கிலும் ஆசீர்வதிப்பதாகக் கூறிய தேவன் ஆசீர்வதித்தது மாத்திரமல்ல இன்னும் அநேகருக்கு உங்களை ஆசீர்வாதமாய் மாற்றி ஆசீர்வதிக்க வல்லவர் உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக.

தேவனுடைய பிள்ளைகளே நெகேமியாவின் உள்ளத்தில் பெரியதோர் சஞ்சலமாயிருந்தது உடைக்கப்பட்டிருந்த எருசலேம் மதிலை எவ்வாறு கட்டியெழுப்புவது? என்பதே மேலே கூறப்பட்டுள்ள வேதாகம வசனத்தின்படி அர்தசஷ்டா ராஜாவுக்கு தேவன் நெகேமியாவின் உள்ளத்திலிருக்கும் வேதனைகள் சோர்வுகளைக் குறித்து தெரியப்படுத்தி அவன் அவ்வாறு துக்கத்திலிருப்பதற்கு என்ன காரணம்? என்பதை வெளிப்படுத்தி ராஜாவுக்கூடாக நெகேமியாவுக்கு "ஒத்தாசை "செய்ய கிரியைச் செய்த விதம் மிகவும் "அற்புதமானதும் ஆச்சரியமானதும் ஆகும். நெகேமியா 02ம் அதிகாரத்தை நீங்களும் முழுமையாய் வாசித்துப் பாருங்கள் தேவன் மீது அளவற்ற அன்புக் கொண்டிருந்த நெகேமியாவுக்கு எருசலேம் மதிலை நிர்மாணிக்கும் பெரியதோர் திட்டத்தை பலமான ஓர் ராஜாவைக் கொண்டு ஒத்தாசைப் புரிய தேவன் கிரியைச் செய்ததுப் போல தேவனாகிய கர்த்தர் இன்றும் உங்களது வாழ்க்கையிலே இருக்கின்ற பெரிய இக்கட்டுக்கள் நிறை வேற்றப்படாத தேவைகள் நிமித்தமாய் அவற்றோடு சம்பந்தப்பட்ட நபர்களுக்கூடாக உங்களுக்கு ஒத்தாசைப் பெற்றுக் கொடுக்க வல்லமையுள்ளவராய் இருக்கிறார்.

தேவ பிள்ளைகளே நீங்களும் பெலப்படுங்கள். தைரியமடையுங்கள் நாம் நினைப்பதற்கு மேலாகவும் கேட்பதற்கு மேலாகவும் அதிகமாக செய்ய வல்லமைமிக்க தேவன் அவரே இன்றைய நாளிலும் உங்கள் எல்லாத் தேவைகளையும் நிறைவேற்ற பொருத்தமான நபர்களை அனுப்பி கிரியை செய்வார். ஆகையால் உங்கள் முழு உள்ளத்தோடு அவர் மீது விசுவாசமுள்ளவர்களாயிருங்கள். நீங்கள் நெகேமியாவைப் போல உங்கள் தேவனாகிய கர்த்தர் மீது அதிக அன்பாய் இருக்கும் பொழுது அவரின் முகத்தை நித்தமும் தேடும்பொழுது உங்களுக்கு இன்றைய நாளில் அவர் ஒத்தாசை செய்வார். வெற்றியின் நாள்.



என்னுடைய பிதாவே, நீர் எமக்கு ஒப்பற்ற விதமாய் ஒத்தாசை செய்யும் தேவன் நீர் நெகேமியாவுக்கு ராஜாவிற்கூடாக உதவிக் கிடைக்கச் செய்தீர் என்னுடைய பிதாவே, எனக்கு பொருத்தனை செய்த நபர்களுக்கூடாக இன்றைய நாளிலே உதவிக் கிடைக்கக் கிருபைச் செய்யும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

---

கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே, கர்த்தரை நம்புங்கள்;
அவரே அவர்களுக்குத் துணையும் அவர்களுக்குக் கேடகமுமாயிருக்கிறார். சங்கீதம் 115:11

ஜீவ மன்னா

மே 12

ஞாயிறு

## மனிதனின் வேதனைகளை அறிந்த தேவன் !

இன்றைய வேதவாசிப்பு


வெளி. 03 - 04

**"இவர்களில் சிலர் தூரத்திலிருந்து வந்தவர்களாகையால், நான் இவர்களைப் பட்டினியாய் வீட்டிற்கு அனுப்பிவிட்டால் வழியில் சோர்ந்துபோவார்களே என்றார்."**
(மாற்கு 8:3)

அன்பார்ந்த தேவப்பிள்ளைகளே, ஜீவனுள்ள இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே இன்றும் உங்களுக்கு நன்நாளாகட்டும் என பிரார்த்திக்கின்றேன். பரலோகத்தைக் குறித்தும் பூலோகத்தைக் குறித்தும் கோள் மண்டலங்களைக் குறித்தும் அவற்றின் எல்லா இரகசியங்களைக் குறித்தும் நீங்கள் அறிந்துள்ளமையால் எல்லா மனிதாகளையும் விட நாம் விசேஷித்தவர்கள். கல்விமான்களும் பண்டிதர்கள் எனக் கூறப்படுபவர்களாலும் அறியாத அநேக காரியங்களைக் குறித்தும் நீங்கள் தெரிந்துள்ளமையால் நீங்கள் அவர்களை விட விஷேசித்தவர்கள்.

தேவ பிள்ளைகளே, மேலே கூறப்பட்ட மாற்கு 8:3 வசனத்தை வாசித்து பார்க்கும் போது நாம் அறிந்துக் கொள்வது " தேவனாகிய இயேசுக்கிறிஸ்து அந்த மனிதர்களைக் குறித்து துக்கப்பட்டதாக" ஆகும். ஏனெனில் " அவர்கள் உணவு உட்கொள்ளாது உபவாசத்தோடு இருக்கின்றமையால் அவர்களுக்கு உணவு கொடுக்காது வீட்டிற்கு அனுப்பினால் அவர்கள் பசியோடு சென்றால் வழியிலே மயக்கம் ஏற்பட்டு விழுந்துவிடக் கூடும். ஆவர்களில் சிலர் தூரத்திலிருந்து வந்திருக்கின்றார்கள், என தனது சீஷர்களுக்கு கூறியதிலிருந்து தமது ஜனங்களைக் குறித்து தன் உள்ளத்திலே துக்கப்பட்டதாக நாம் அறிந்துக் கொள்கிறோம். ஆயினும் அவருடைய சீஷர்கள் "இந்த வனாந்தரத்தில் ஒருவன் எங்கேயிருந்து அப்பங்களைக் கொண்டு வந்து இத்தனைப் பேர்களைத் திருப்தியாக்கக் கூடும்" என்றார்கள். ஆயினும் தனது சீஷர்களின் வார்த்தைகளுக்கு செவிமடுக்காது "திரளான ஜனங்கள் மூன்று நாட்களாக அவரோடு கூடவிருந்து உபவாசத்தோடு இருந்தமையினாலே "அவர்களின் சூழ்நிலையை அறிந்து சீஷர்களிடம் என்ன இருக்கின்றது எனக் கேட்டு அவர்களிடம் ஐந்து அப்பங்களும் இரண்டு சிறிய மீன்களும் இருப்பதைக்கண்டு அவற்றை ஆசீர்வதித்து கூடியிருந்த ஜனங்களுக்கு அவற்றை புசிக்கக் கொடுத்தார். அவர்கள் அதைப் புசித்து திருப்தியடைந்தார்கள். மீதியான துணிக்கைகளை ஏழு கூடை நிறைய எடுத்தார்கள்.

தேவ பிள்ளைகளே, உங்கள் ஆவிக்குரிய பயணத்தை விசுவாசத்தோடு மாத்திரமே ஓட முடியும். நீங்கள் மனிதர்களிடம் எதையும் கேட்க வேண்டாம். விஷேடமாக அவிசுவாசிகளிடம் நீங்கள் ஆலோசனைகளை கேட்காதீர்கள். அன்று அவர் அருகிலிருந்து 4000 பேர் அவர்களுக்கு பசி என்றோ மூன்று நாட்கள் உணவு இன்றி இருப்பதானால் எமக்கு பசியோடு திரும்பிச் செல்ல முடியாது என்றோ கூறவில்லை. "வயிற்றுப் பசியைக்" குறித்து இயேசு நன்கு அறிந்தமையினாலே அவர்களின் துக்கத்தை அவர் அறிந்திருந்தார்.இன்றைய நாளிலே உங்களது வாழ்க்கையிலே எல்லாக் காரியங்களைக் குறித்தும் அவர் அறிந்திருக்கின்றாா. உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக உங்களுக்கு பெற்றுக்கொடுக்கக் கூடிய ஆசீர்வாதம் என்ன? எனறும் உங்கள் தேவனாகிய கர்த்தர் அறிந்திருக்கிறாா. நீங்கள் அவருடைய பாதத்தில் கண்ணீரோடு ஜெபம் பண்ணுங்கள். உங்கள் தேவன் உங்கள் துக்கங்களை மாற்றி உங்களைத் தேற்றுவார். உங்களுக்கு வெற்றியின் நாள்.



என்னுடைய பிதாவே, நீர் துக்கத்தை காண்கிற தேவன் ஆகையால் நீர் எனது துக்கத்தை நன்றாக அறிந்திருக்கிறீர். பிதாவே எனது வாழ்வை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். இயேசுக்கிறிஸ்துவுக்கூடாக எனது வாழ்விலே இருக்கும் எல்லா துக்கங்களையும் நீர் அகற்றி என்னைத் தேற்றும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

---

கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்:
இதோ, நான் நானே என் ஆடுகளை விசாரித்து, அவைகளைத் தேடிப்பார்ப்பேன்.
எசேக்கியேல் 34:11

ஜீவ மன்னா

மே 13

திங்கள்

## உங்கள் பாவங்களை மன்னிக்கும் இயேசுக்கிறிஸ்து !

இன்றைய வேதவாசிப்பு


வெளி. 05 - 06

**"பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்றார்."** (மத்தேயு 9:6)

அன்பார்ந்த தேவனுடைய பிள்ளைகளே, ஜீவனுள்ள இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே இன்றும் உங்களுக்கு அருமையான நன்நாளாகட்டும் என வாழ்த்துகிறேன். வானத்தையும் பூமியையும் அதிலுள்ள யாவற்றையும் படைத்து ஆளுகை செய்கின்ற சர்வவல்லமையுள்ள ஜீவனுள்ள தேவப் பிதாவினுடைய ஒரே பேறான குமாரனாகிய ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து விசுவாசிக்கின்றமையால் நீங்களும் நானும் அதிர்ஷ்டசாலிகள். ஏனெனில் அவர் எமது மீட்பர்.

தேவ பிள்ளைகளே, மேலே கூறப்பட்ட மத்தேயு 9:6ல் கூறப்படுவது "இப்பூமியிலே மனிதர்களாகிய எமது பாவங்களை மன்னிக்க மனித குமாரனாகிய ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவுக்கு மாத்திரம் வல்லமை உண்டு என்பதாக. ஏனெனில் இயேசுக்கிறிஸ்து அவரது ஊராகிய நாசரேத்துக்கு வந்தபோது மனிதர்கள் படுக்கையிலிருந்து திமிர்வாதக்காரனை அவரிடத்திற்கு கொண்டு வந்தனர். இயேசுக்கிறிஸ்து அவர்களின் விசுவாசத்தைக் கண்டு "மகனே திடன்கொள் உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது" என்று திமிர்வாதக்காரனுக்கு கூறினார். அப்பொழுது அங்கே கூடியிருந்த சிலர் இவன் தேவதூஷணம் சொல்கிறான் என் உள்ளத்திலே சொல்லிக்கொண்டார்கள். இயேசு அவர்களின் நினைவுகளை அறிந்து நீங்கள் உங்கள் இருதயங்களில் பொல்லாதவைகளைச் சிந்திக்கிறதென்ன? எனக்கூறி உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ, எழுந்து நடவென்று சொல்வதோ, எது எளிது? ஏன்று அவர்களிடம் கேட்டு மேலே கூறப்பட்ட வசனங்களை கூறினார் அதாவது பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷ குமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறிந்துக் கொள்ளும்படியாக எனக்கூறிய எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்குப் போ என திமிர்வாதக்காரனுக்கு கூறினார். தேவப் பிள்ளைகளே, அப்பொழுது அவன் எழுந்து தன் வீட்டுக்குப் போனான் என லேத வசனத்தில் எழுதப்பட்டிருக்கின்றது.

அன்பு தேவ பிள்ளைகளே உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக உங்களது பெற்றோரின் பரம்பரையினால் உங்கள் பின்னே வரும் எல்லா பாவங்களின் நிமித்தமாகவும் உங்களை மீட்க, அப்பாவங்களையெல்லாம் மன்னித்து உங்களது வாழ்வை ஆசீர்வதிக்க உங்கள் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து உங்களோடு இன்றும் ஜீவனுள்ளவராய் இருக்கிறார். அவரை நீங்கள் காணாவிட்டாலும் அவர் உங்களோடு கூட இருக்கின்றார். உங்கள் வாழ்விலே தெரிந்தோ தெரியாமலோ நீங்கள் செய்த எல்லா பாவங்களையும் அவர் மன்னித்து உங்களைக் குணமாக்குவார். உங்கள் வாழ்க்கைக்கு விரோதமாகச் கிரியைச் செய்கின்ற சத்துருவின் எல்லா கிரியைகளையும் செயழிழக்கச் செய்வார். நீங்கள் இதுவரைக்குமாக பாவமன்னிப்பைப் பெற்றிருந்தால் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். நீங்கள் பெலப்படுங்கள், தைரியமடையுங்கள். உங்களுக்கு வெற்றியின் நாள்.



என்னுடைய பிதாவே, உமது குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவுக்காக நன்றி அவர் என் பாவங்களையெல்லாம் மன்னிப்பார். என்னை ஆசீர்வதிப்பார் நீர் அவரை எனக்காய் அனுப்பியமையால் நன்றி. இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினால் ஆமென்.

---

வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்;
உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்;
அவைகள் இரத்தாம்பரச்சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும். ஏசாயா 1:18

ஜீவ மன்னா

மே 14

செவ்வாய்

# வருடத்தின் ஆரம்பத்திலிருந்து வருடத்தின் இறுதிவரை ஆசீர்வதிக்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு


வெளி. 07 - 08

**"அது உன் தேவனாகிய கர்த்தர் விசாரிக்கிற தேசம், வருஷத்தின் துவக்கமுதல் வருஷத்தின் முடிவுமட்டும் எப்பொழுதும் உன் தேவனாகிய கர்த்தரின் கண்கள் அதின்மேல் வைக்கப்பட்டிருக்கும்."** (உபாகமம் 11:12)

அன்புப் தேவ பிள்ளைகளே, ஆசீர்வதிக்கும் மகோன்னதமான மகாப்பெரிய தேவனின் ஒத்துழைப்பையும் அவரது அநாதி சிநேகத்தையும் பெற்றுக்கொள்ள வரப்பிரசாதம் பெற்ற நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள் என்பதை கூற விரும்புகிறேன். ஏனெனில் அவர் எம்மை ஆசீர்வதிக்கும் தேவன். தேவனை தனது சொந்த தெய்வமாக ஏற்றுக்கொண்ட ஜாதியும் அவரால் சொந்த ஜனமாக தெரிறந்துக்கொள்ளப்பட்ட ஜனமும் ஆசீர்வதிக்கப்பட்டது என்று வேதவசனத்தில் எழுதப்பட்டுள்ளது. ஆகையால் உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக.

தேவ பிள்ளைகளே, மேலே கூறப்பட்ட உபாகமம் 11:12ல் தேவனாகிய கர்த்தர் எம் தேசத்தைக் குறித்து விசாரிக்கின்றதாகவும் வருஷத்தின் துவக்க முதல் வருஷத்தின் இறுதி வரைக்குமாக அவரது கண்கள் எமது தேசத்தின் மேல் வைக்கப்பட்டிருப்பாதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகையால் இன்றைய நாளில் மாத்திரம் அல்ல இவ்வருடத்தின் ஜனவரி 01 முதலாம் திகதியிலிருந்து டிசம்பர் 31ம் திகதி மட்டுமாக எல்லா நாட்களிலும் உங்களை ஆசீர்வதிக்க உங்கள் தேவனாகிய கர்த்தர் ஆயத்தமாயிருக்கின்றார். நீங்கள் செய்ய வேண்டியது அவர் மீது விசுவாசம் வைப்பது மாத்திரமே. நீங்கள் அனுதினமும் அதிகாலையிலே அவர் சமுகத்தில் அமர்ந்து அந்நாளை ஒப்புக்கொடுத்து ஜெபம் செய்யுங்கள். அதுமட்டுமல்லாது அன்றைய நாளுக்குத் தேவையான எல்லாக் காரியங்களையும் அவருக்கு ஒப்புவித்து நீங்கள் தேவனை நோக்கிக் காத்திருங்கள். மனிதர்கள் உங்களிடம் கூறுபவைகளைக் குறித்து உங்கள் அவதானத்தை செலுத்தாது உங்களை ஆசீர்வதிப்பதாக என பொருத்தனை பண்ணிய நமது படைப்பின் பிதாவினுடைய வசனத்தை ஆழமாக விசுவாசித்து இலகுவான உள்ளத்தோடு வாழுங்கள். அவரது வசனத்தை நீங்கள் விசுவாசித்து அதற்குள் களிகூர்ந்து இரவும் பகலும் அவற்றை தியானித்தால் நீங்கள் செய்யும் யாவும் வாய்க்கும்.

தேவனுடைய பிள்ளைகளே, உங்கள் தேவனின் வாயிலிருந்து புறப்படும் எல்லா வசளங்களும் இன்றும் கிரியை செய்கின்றதுர் ஆகவே தோல்விகளைக் கண்டு பயந்து ஆவற்றை ஆழமாக யோசித்து உங்கள் உள்ளத்தை அதைரியப்படுத்திக்கொள்ள வேண்டாம். சேனைகளின் கர்த்தர் நம்மோடு இருக்கின்றார் மேலே கூறப்பட்ட வசனத்தின்படி அவரது கண்கள் நம்மீது வைக்கப்பட்டிருக்கின்றது. உங்களுக்கு வெற்றியின் நாளாகட்டும்.



என்னுடைய பிதாவேஇ நீர் என்னை ஆசீர்வதிக்கும் தேவன் வருட ஆரம்பத்திலிருந்த வருட இறுதிவரை நீர் என்னை ஆசீர்வதிக்க நோக்கமாய் இருப்பதானாலே ஸ்தோத்திரம். பிதாவே உம்முடைய வசனத்தின்படி வருடம் முழுவதுமாக ஆசீர்வதித்தருளும். இயேசுவின் நாமத்தினால் ஆமென்.

---

தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர்; கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார்; உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார். சங்கீதம் 84:11

ஜீவ மன்னா

மே 15

புதன்

# உங்கள் எதிர்க்கால சந்ததியை ஆசீர்வதிக்கும் தேவன்!

இன்றைய வேதவாசிப்பு


வெளி. 09 - 10

**"என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ்செய்கிறவராயிருக்கிறேன்."** (யாத்திராகமம் 20:6)

அன்பு தேவ பிள்ளைகளே, ஜீவனுள்ள சர்வவல்லமையுள்ள மகோன்னதமான தேவனுடைய குமாரனாகிய ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே இன்றும் உங்களக்கு நன நாளாகட்டும் என பிரார்த்திக்கின்றேன். நாளைய நாளைக் குறித்தோ எதிாகாலத்தைக் குறித்தோ அடுத்த வருடத்தைக் குறித்தோ உலக முடிவைக் குறித்தோ அறியாது வாழ்ந்துக் கொண்டிருக்கும் ஜனங்களுக்கு மத்தியில் "உங்கள் எதிகால தலைமுறை மட்டுமாய் ஆசீர்வதிக்க வல்ல" தேவனைக் குறித்து அறிந்துக் கொண்ட நீங்களனைவரும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.அது நீங்கள் யாவரும் பெற்ற உன்னத வரப்பிரசாதமாகும்.

தேவ ஜனமே, உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக, உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களை "தனது சொந்த பிள்ளையாக" பிரித்தெடுத்து உங்களை அவரது இராஜ்ஜியத்திற்கு உரிமையாளராக மாற்றுவதற்காக மாத்திரம் அல்ல உங்கள் வாழ்நாடகளெல்லாவற்றையும் மிகவும் அழகாக திட்டம் செய்து உங்களை யாவற்றிலும் ஆசீர்வதித்து முன்னோக்கி வழி நடத்துவதற்காகவே ஆகும். நிகழ்காலத்தில் உங்கள் நிலையைக் கண்டு சில சில சம்பவங்களைக் கண்டு உங்கள் உள்ளத்தை சுமைப்படுத்திக் கொள்ளாதிருங்கள். அவற்றை உங்கள் உள்ளத்திற்குள் செலுத்தி உங்கள் உள்ளத்தை உபத்திரவப்படுத்த உங்கள் எதிராளியான சத்துருவானவனுக்கு இடங் கொடுக்க வேண்டாம். மேலே கூறப்பட்ட பிரதான வேதாகம வசனத்திலே நாம் கர்த்தரை நேசித்து அவரது கற்பனைகளைக் நாம் நிறைவேற்றும் பொழுது எமது ஆயரக்கணக்கான தலைமுறைமட்டுமாக எமக்கு இரக்கஞ் செய்வதாக குறிப்பிட்டுள்ளது. ஆகையால் உங்கள் பிள்ளைகளைக் குறித்தோ பிள்ளைகளின் பிள்ளைகளைக் குறித்தோ உள்ளத்தை பாரப்படுத்திக் கொள்ள அவசியமில்லை. உங்கள் தேவனாகிய கர்த்தர் நல்ல எதிர்க்கால திட்டங்களை நிர்மாணித்து நிர்ணயம் செய்திருக்கிறார்.

தேவ பிள்ளைகளே, இன்றைய நாளை நீங்கள் ஆரம்பிப்பதும் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்காக திட்டம் பண்ணின விஷேட திட்டத்தின் மூலமாகவே. ஆகையால் நீங்கள் செல்கின்ற இவ் ஆவிக்குரிய பயணத்திலே உங்களை முன்னோக்கிக் கொண்டு செல்வது மாத்திரமல்லாது ஆவிக்குரிய பயணத்திலே உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களோடு இருப்பதனாலே வாழ்க்கைப் பயணத்திலே உங்களை முன்னோக்கிக் கொண்டு செல்வது மாத்திரமல்லாது ஆவிக்குரிய பயணத்திலே உங்களை போஷித்து ஆவிக்குரிய வாழ்வை உயர்த்திக் கொண்டு செல்வார் என்பதை விசுவாசியுங்கள். இன்னுமாக உங்கள் வாழ்க்கைச் சம்ந்தப்பட்ட சகல காரியங்களையும் உங்கள் பிள்ளைகளின் வாழ்க்கைச் சம்பந்தப்பட்ட சகல காரியங்களையும் அவர் வாய்க்கச் செய்வார். உங்கள் உள்ளத்திலிருக்கும் சகல பயங்களையும் நீக்கி உங்கள் எல்லா காரியங்களையம் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து நீங்கள் இடைவிடாது தினமும் ஜெபம் பண்ணுங்கள். உங்கள் தேவனாகிய கர்த்தர் சதாகாலங்களிலும் உங்களோடிருப்பாராக; வெற்றியின் நாள்.



*பிதாவே நீர் எனது எதிர்கால சந்ததியை ஆசீர்வதிக்கும் தேவன். என் உள்ளத்திலிருந்து எல்லாப் பயங்களையும் நீர் இன்று விலக்கினீர். பிதாவே என் வாழ்வையும் என் குடும்பத்தவர்களையும் நீர் ஆசீர்வதித்தருளும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

---

உன் ஜனங்கள் யாவரும் நீதிமான்களும், என்றைக்கும் பூமியைச் சுதந்தரிக்கும் குடிகளும், நான் நட்ட கிளைகளும், நான் மகிமைப்படும்படி என் கரங்களின் கிரியைகளுமாயிருப்பார்கள்.
ஏசாயா 60:21

# விசுவாசத்தினால் நீங்கள் வெற்றியைப் பெற முடியும் !

இன்றைய வேதவாசிப்பு
வெளி. 11 - 12

**"நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள்; அப்படியில்லாவிட்டாலும் என் கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள்."**
(யோவான் 14:11)

அன்பு தேவ பிள்ளைகளே, ஜீவனுள்ள இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்கு நன் நாளாகட்டும் என பிரார்த்திக்கினறேன். இலங்கையில் வாழும் இரண்டு கோடியே மூன்று இலட்சம் இலங்கையருக்கு மத்தியில் இயேசுக்கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு பரலோக தேவபிதாவானவரின் சொந்தப் பிள்ளைகளாக இருக்கின்ற நாம் அனைவரும் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். அந்த அதிர்ஷ்டசாலிகள் அனைவருக்கும் மத்தியிலும் ஜீவ மன்னா அனுதின தியான புத்தகத்திற்கூடாக தேவனின் உன்னதமான அன்பைக் குறித்து அறிந்துக் கொண்டு அனுதினமும் அவரது அன்புக்கு கிட்டிச்சேர வரப்பிரசாதம் பெற்ற நீங்களும் நானும் உணமையாகவே ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

தேவ பிள்ளைகளே, ஆவிக்குரிய பிள்ளைகளாகிய எம்முடைய வாழ்க்கையிலே குறைவுகளின் நிமித்தமும் பெலவீனங்களில் நிமித்தமும் எமக்கு கிடைக்க வேண்டிய ஆசீர்வாதங்கள் கிடைக்காமல் போவதுண்டு. இல்லாவிட்டால் ஆசீர்வாதங்கள் கிடைக்கப்பெறுவது தாமதிக்கலாம். சில வேளைகளிலே ஓர் சின்ன தோல்வி ஏற்பட்டாலும் "ஏதாவதொன்று உங்களுக்கு தேவை" என்று என்னும்பொழுது அவை கிடைக்காமற் போனால் உங்கள் முழு வாழவே தோல்வியடைந்துவிட்டதாக தோன்றக்கூடும். ஆனாலும் நீங்கள் பெலனடையுங்கள். உங்களைப் பெயர்ச்சொல்லி அழைத்தது ஆலோசனையில் பெரியவரும் செயல்களில் வல்லவருமாகிய தேவனே. ஆவர் உங்களைப் எப்பொழுதும் கைவிடவோ, விட்டுவிலகவோ மாட்டார். தேவப் பிள்ளைகளே, அன்றாடம் எம்முடைய வாழ்க்கையிலே நடைபெறும் யாவும் ஒன்றாக நடைபெறுவது எமது நன்மைக்காகவே ஆகும். ஆகையால் உங்களது வாழ்விலே அப்படியொன்று சம்பவிக்கும் பொழுது உங்கள் உள்ளம் கலங்குமேயானால் நீங்கள் சோர்ந்துபோவீர்களேயானால் தேவனைக் குறித்து உங்களுக்குள் இருக்கும் விசுவாசம் குறைவுப்பட்டுள்ளது. எனவும் அவருக்குள் நீங்கள் கொண்டுள்ள அன்பு குறைவுப்பட்டுள்ளது எனவும் நான் உங்களுக்கு கூற விரும்புகிறேன்.

தேவனுடைய பிள்ளைகளே, நீங்கள் பெலப்படுங்கள். உங்கள் விசுவாசத்தை அதிகரிக்கச்செய்து விசுவாசத்திற்கூடாக வாழ்விலே வெற்றி பெற வேண்டும். பிரதான வேதாகம வசனத்திலே அவரது வசனத்தைக் கேட்டு அவரை விசுவாசிக்கும்படியாக கூறப்பட்டுள்ளது. இல்லாவிட்டால் அவரது கிரியைகளைக் கண்டு விசுவாசிக்கும்படியாய் எமக்கு கூறப்பட்டுள்ளது. ஆகையால் நீங்கள் கலங்காது பரலோகத்திற்கு நேராய் உங்கள் கைகளை உயர்த்தி முழங்கால்படியிட்டு கண்களை ஏறெடுத்து பிதாவே எனது வாழ்வையே உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன் என்னுடைய எல்லா துன்பங்களிலும் உபத்திரவங்களிலுமிருந்து என்னை மீட்டு இரட்சியும் என முழு உள்ளத்தோடு ஜெபம் பண்ணுங்கள். அவிசுவாசிகளைப் போல ஆவிக்குரிய தேவ பிள்ளைகளாகிய நீங்கள் "அற்புதங்களுக்கு" பின்னே ஓடாது நீங்கள் தேவனுடைய சொந்த பிள்ளையானபடியால் விசுவாசத்தில் வெற்றி பெறுங்கள். இன்றைய நாள் வெற்றியின் நாள்.



என்னுடைய பிதாவே, இன்றைய நாளின் வசனத்திற்காக உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். என்னுடைய பிதாவே, என் வாழ்வை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். எனக்குள் உமது விசுவாசத்தை அதிகரிக்கச் செய்யும். நிலையான விசுவாசத்தை எமக்குள் வைத்தருளும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

---

விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்.
பின்வாங்கிப்போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார். எபிரெயர் 10:38

ஜீவ மன்னா

மே 17

வெள்ளி

## மனிதனின் சிறுமையைக் குறித்து காண்கின்ற தேவன் !

இன்றைய வேதவாசிப்பு


வெளி. 13 - 14

**"படுத்திருந்த அவனை இயேசு கண்டு, அவன் வெகுகாலமாய் வியாதிஸ்தனென்று அறிந்து, அவனை நோக்கி: சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிறாயா என்று கேட்டார்."** (யோவான் 5:6)

அன்பார்ந்த தேவனுடைய பிள்ளைகளே, ஜீவனுள்ள இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்கு நனநாளாகட்டும் என பிராத்திக்கின்றேன் எல்லாவற்றையும் செய்ய வல்லமையுள்ள, மகா வல்லமையான, அன்பினால் பூரணமாகிய மகோன்னதமான தேவனைக் குறித்து அறிந்துக் கொண்டு அவருடைய சொந்தப் பிள்ளைகளாக உங்களது தனிப்பட்ட வாழ்க்கையில் அவரோடு கூடச் செல்ல கிடைத்தது நீங்கள் பெற்ற வரப்பிரசாதம் ஆகும். அப்படியே உங்கள் வீட்டிற்கே தேவ செய்தியை அனுப்பி உங்களைப் பெயர்ச் சொல்லி உங்களை அவரிடத்திற்கு அழைத்து உங்களை தனது சொந்த பிள்ளைகளாக மாற்றியது மிகவும் விஷேடமானதொன்றாகும்.

தேவ பிள்ளைகளே அவர் மனிதர்களின் சிறுமையை நனகு அறிந்த தேவன் 29 வருட ஆவிக்குரிய வாழ்க்கையிலே நான் பெற்ற அனுபவங்களின்படி நான் உங்களுக்கு கூறுவது அவரது கிருபைகள் ஈடு இணையில்லாதது அன்பினால் நிறைந்த ஒரே தேவன் என்பதே. மேலே கூறப்பட்ட பிரதான வேதாகம வசனத்திலே இயேசு எருசலேமிலே ஆட்டுவாசலருகே இருக்கின்ற குளத்திலே ஒரு மனுஷன் 38 வருடங்களாக படுத்தபடுக்கையாயிருப்பதைக் கண்டு, அவர் அவனருகே சென்று அவனை நோக்கி சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா? என்று கேட்டார். தேவ பிள்ளைகளே அந்த மனிதன் 38 வருடகாலமாக அவ்வாறு படுக்கயைிலிருந்திருப்பான் என நான் நினைக்கிறேன். ஆதலால் அவன் மிகவும் வயது முதிர்ந்த தோற்றமுடையவனாக முகத்திலே எவ்வித அலங்காரமுமின்றி பார்க்கின்ற எவரையும் கவராத விதத்தில் இருந்திருக்கக் கூடும்.

தேவனுடைய பிள்ளைகளே, ஆயினும் நம்முடைய இயேசுக்கிறிஸ்து அவனருகே சென்று அவனை அழைத்து சொஸ்தமாக விரும்புகின்றாயா? என்று அவனிடம் கேட்ட பின்பதாக அவர் அவனை குணமாக்கினார். அவர் எம் மத்தியில் ஜீவனுள்ளவராய் இருக்கின்றார். நீங்கள் வசிக்கும் வீட்டிலே, வேலை செய்கின்ற இடத்திலே அல்லது வைத்தியசாலையிலே அல்லது வேறெந்த இடத்திலோ இருந்து உங்கள் வாழ்க்கையை குறித்து எதிர்க்காலத்தைக் குறித்து நினைத்து மிகவும் கவலையோடு இருக்கலாம். உங்கள் வாழ்க்கையிலே நடந்த சம்பவங்கள், தோல்வியடைந்தவைகள் நினைத்து வேதனையோடு இருக்கின்றீர்களா? இல்லாவிட்டால் உங்களது வாழ்க்கை "படுக்கையாயிருக்கினறது." எனவே ஒரே இடத்திலே கெட்டுப்போகின்றது "முன்னேற்றத்தைக்" காண முடியவில்லை என நினைக்கலாம். ஆனாலும் இயேசுக்கிறிஸ்து உங்கள் உள்ளத்திலே இருக்கும் வேதனைகள், துக்கங்கள், சோர்வுகள் ஆகியவற்றை விலக்கி உங்கள் சிறுமையிலிருந்து உங்களை மீட்டுக்கொள்வார். உங்களுக்கு வெற்றியின்நாள்.



*என்னுடைய பிதாவே, நீர் அதிக அன்புள்ள தேவப்பிதா. உமது புத்திர சுவீகரத்தின் ஆவியைப் பெற்று இவ்வுலகிற்கு வந்து மனதர்களுக்கு அதிக அன்பு செலுத்தினீர். அவனது சிறுமையை குறித்து காண்கிறீர். எனது வாழ்க்கையை நீர் ஆசீர்வதியும் இயேசுவின் நாமத்தினால் ஆமென்.*

---

*சிறுமையும் எளிமையுமானவர்கள் தண்ணீரைத் தேடி, அது கிடையாமல், அவர்கள் நாவு தாகத்தால் வறளும்போது, கர்த்தராகிய நான் அவர்களுக்குச் செவிகொடுத்து, இஸ்ரவேலின் தேவனாகிய நான் அவர்களைக் கைவிடாதிருப்பேன்.* ஏசாயா 41:17

ஜீவ மன்னா

மே 18

சனி

## சோதனைகளின் போது எம்மோடிருக்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு


வெளி. 15 - 16

**"இதோ, உன்னைப் புடமிட்டேன்; ஆனாலும் வெள்ளியைப்போலல்ல, உபத்திரவத்தின் குகையிலே உன்னைத் தெரிந்துகொண்டேன்."** (ஏசாயா 48:10)

அன்பு தேவ பிள்ளைகளே, உங்களுக்கு சமாதானத்தினால் நிறைந்த இனிய நாளுக்காக இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகின்றேன். உங்கள் எல்லாப் பாவங்களையும் மன்னித்து உங்களை மன்னித்து உங்களை ஆசீர்வதிக்கும், தேவனுடைய குமாரனாகிய உங்கள் மீட்பராகிய இயேசுக்கிறிஸ்துவை நீங்கள் விசுவாசிக்கின்றமையினாலே, அவரை நீங்கள் ஆராதிக்கின்றமையினாலே, அவரை நீங்கள் அவரின் மகிமையின் வல்லமையைக் குறித்து அறிந்திருக்கின்றபடியினாலே இரண்டு கோடியே மூனறு இலட்சம் இலங்கையருக்கு மத்தியிலே உங்களைப் போன்ற அதிர்ஷ்டசாலிகள் இல்லை என்று கூறினால் மிகையாகாது.

தேவ பிள்ளைகளே "மனிதர்களால் தாங்கக்கூடிய உபத்திரங்களேயன்றி வேறொன்றையும் உங்கள் மீது சுமத்தவில்லையே என வேதவசனத்திலே எழுதப்பட்டுள்ளது. ஆயினும் அந்த உபத்திரவங்கள் எம்மை மேற்கொண்டு அதன் எல்லையையும் தாண்டிச்செல்லும் சந்தர்ப்பங்களும் உண்டு. ஆயினும் உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்கள் ஆத்துமாவைப் போலவே உடலுக்கும் எவ்வித தீங்கும் அனுகாது வண்ணம் அவரது கண்களின் கண்மணியைப்போல் உங்களைப் பாதுகாக்க இன்றும் ஜீவனுள்ளவராய் உங்களோடிருக்கிறார். பரிசுத்த வேதாகமத்திலே மல்கியா 3:3ல் "அவர் உட்கார்ந்து வெள்ளியை புடமிட்டு சுதந்தரித்துக்கொண்டிருப்பார். அவர்களைப் பொன்னைப் போலவும் வெள்ளியைப் போலவும் புடமிடுவோர் என எழுதப்படடிருப்பதைப் போல அக்கினிச்சூளை எனும் உபத்திரவத்திலே அவர் உங்களைவ விட்டுவிடாது உங்கள் அருகே இருந்து ஏற்ற நேரத்திலே உங்கள் உபத்திரவம் எனும் அக்கினிச் சூளையிலே இருந்து உங்களை அகற்றுவார்.

தேவனுடைய பிள்ளைகளே, உங்கள் இப்பூலோக வாழ்வு செழிப்பாக மாற வேண்டுமாயின் முதலாவதாக உங்கள் வாழ்வில் ஆத்துமா வளர்ச்சியடைய வேண்டும, அப்படியாக வேண்டுமாயின் உங்கள் தேவன் உங்களைப் பரீட்சித்து உங்கள் வாழ்வை வளர்ச்சியடையச் செய்ய அவரது அனுமதியின்றி ஏதும் நடைபெறாது என நாம் அறிவோம். ஆகையால் மனிதனுக்குள் உயிரோடு கூட ஆத்துமாவையும் உண்டாக்கின தேவன் எம்முடைய ஆத்துமாவை பெலப்படுத்தவும், எமது ஆததுமாவில் காணப்படுகின்ற பெலவீனங்களை விலக்க உபத்திரவங்களுக்கூடாக எம்முடைய ஆத்துமாவை சோதித்தறிகிறார். அவர் அருபியாய் இருக்கின்றமையினாலே முதலாவதாக எமது ஆத்துமாவை குறித்து கவனித்து ஆத்துமாவை செழிப்பாக்குகின்றார். எல்லாவற்றையும் நேர்த்தியாக அழகாக செய்து முடிக்கும் தேவன் உங்கள் எதிர்காலத்தை அழகாக நேர்த்தியாக செய்து முடிப்பார் என்பதில் சந்தேகமில்லை. உங்களை அவரது நினைவிலிருந்து அகற்றாதபடியினாலே இன்றும் உங்களுக்கு வெற்றியின் நாள்.



என்னுடைய பிதாவே, நீர் என்னை சோதித்தறியும் தேவன. நீர் என்னை சோதித்து முதலாவதாக என் ஆத்துமாவை செழிப்பாக்குகிறீர். பின்பு எல்லாவற்றிலும் என்னை ஆசீர்வதிக்கிறீர். இன்று என்னை ஆசீர்வதித்தருளும். -ஆமென்-

---

தன்மார்க்கனுடைய பொல்லாங்கை ஒழியப்பண்ணும்;
நீதிமானை ஸ்திரப்படுத்துவீராக; நீதியுள்ளவராயிருக்கிற தேவரீர் இருதயங்களையும்
உள்ளிந்திரியங்களையும் சோதித்தறிகிறவர். சங்கீதம் 7:9

ஜீவ மன்னா
மே 19
ஞாயிறு

## சேனைகளின் கர்த்தா உங்களோடிருக்கிறார் !


இன்றைய வேதவாசிப்பு
வெளி. 17 - 18

**"உங்களை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான்."**
(மத்தேயு 10:40)

பாசமுள்ள என் அருமைப் பிள்ளைகளே, இந்தப் புதிய நாளிலே இந்தக் காலைப் பொழுதிலே கிருபையினாலும் இரக்கத்தினாலும் எங்களை முடி சூட்டும் உயிரோடிருக்கும் எம் மீட்பா இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினால் சகலமும் நன்மைக்கேதுவாய் அமையும்படி ஆசீர்வதிக்கிறேன். இன்றைய நாளில் அநேக கடமைகள் உங்களுக்காக காத்திருக்கும் வேலையிலும் தேவனை தேடும்படியாய் அவர் பாதத்தில் அமர்ந்திருப்பது மாபெரும் சலாக்கியம். குடும்பத் தலைவிகளே நீங்கள் தொழில் செய்பவர்களாயின் வீட்டு வேலைகள் கணவனுடைய பணிவிடைகள் பிள்ளைகள் பராமரிப்பு காரியங்கள் சமையல் போன்ற அநேக வேலைகள் இந்தக் காலைப்பொழுதில் உங்களுக்கென்று காத்திருக்கும். தொழில் நிலையத்தின் வேலைகள் இருந்த போதிலும நீங்கள் அதிகாலையில் எழுந்து நாளை ஆரம்பிக்கும்படி தெய்வததின் பாதத்தில் அமர்ந்து ஜெபித்து இன்றைய நாளை அவர் கரத்தில் ஒப்புவிதது ஜீவமன்னா நாளிதலையும் வாசித்து முடித்து விட்டு வேலைகளை செய்ய ஆயத்தப்படுவீர்கள்.

இப்படி தெய்வததின் திருப்பாதத்தில் ஆரம்பமாகும் நாள ஆசீர்வாதத்தின் நாள். இப்படி ஜெபித்து நாளை ஆரம்பிக்கும் நீங்கள் அதிர்ஷடசாலியே அநேகர் நித்திரை விட்டு எழுந்தவுடனே அன்றைய நாளில் செய்ய வேண்டிய காரியங்களை குறித்து கடமைகளைக் குறித்தும் எண்ணி மனக் கலக்கமடைந்து ஓடும் நேரத்தோடு சேர்ந்து ஓடுகிறார்கள். முனுமுனுத்தபடி அதைரியம் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள் ஆனால் நீங்கள மீட்பர் இயேசுக்கிறிஸ்துவைக் குறித்து அறிந்தவராய் இருப்பதால் உங்கள் காரியங்கள் யாவற்றையும் அவரிடம் ஒப்புவித்து நீங்கள் ஆறுதலாகவும் அமைதியாகவும் காரியங்களை நிறைவேற்றுபவராக இருப்பீர்கள். தேவன் உங்கள் எல்லாக் காரியங்களிலும் துணையிருப்பார். நீங்கள் பெற்றுக்கொள்ளும்படி இந்த ஆசீர்வாதத்தை விரும்பாத சத்துரு உங்களை வேதனைப்படுத்தும் காரியங்கள் உங்கள் உள்ளத்தை கலங்கவைக்கும் காரியங்களைக் கொண்டு வந்து ஜெபவேளைக்கு தடை ஏற்படுத்தி உங்கள் ஆத்துமா ஆவியினால் பெலப்பட முடியாதவாறு செய்து உங்கள் ஆசை இச்சைகளின் மூலம் பாவங்களை தூண்டி விடுவான் உங்களை விழத்தள்ளும்படி தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டிருப்பான்.

தேவ பிள்ளைகளே, விழிப்புணர்வோடு செயல்படுங்கள் கலங்காதிருங்கள் மத்தேயு 10:40ன் வசத்தின்படி நீங்கள் இயேசுக்கிறிஸ்துவின் சீஷர்களை ஏற்றுக்கொண்டால் அவரை ஏற்றுக் கொள்வதற்கு சமன் என்றும் இயேசுக்கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டால் பிதாவை ஏற்றுக் கொள்வதற்கு சமம் என்றும் எழுதப்பட்டுள்ளது. ஆகையால் வானத்தையும் பூமியையும் காண்பவை காணாதவை யாவற்றையும் படைத்து ஆளுகை செய்யும் சர்வ வல்லமையும் பராக்கிரமும் உள்ள தேவன் உங்களோடிருக்கிறார். செங்கடலை பிரித்தவர் கடலின் மத்தியில் உவாந்த நிலத்தை உருவாக்கினார். இஸ்ரவேலரை மீட்டவர் எங்களுக்காக யுத்தம் செய்யும் சேனைகளின் கர்த்தர். நீங்கள் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கும் போது திருமகனுக்கூடாக வல்லமையான காரியங்களைச் செய்து சாத்தானின் பிடியிலிருந்து மீட்டுக்கொளவார். வேற்றியின் நாள்.



எனது தேவனே சேனைகளின் தேவனே உமது குமாரன் இயேசுக்கிறிஸ்துவை நான் ஏற்றுக் கொண்டபடியால் உமது பிள்ளையாக இருக்கிறேன். எனது தகப்பனே இன்றைய நாளிலும் சாத்தானுடைய கன்னிகளுக்கு விலக்கி என்னை காத்துக் கொள்ளுங்கள். ~ஆமென்~

---

நான் முந்தினவரும், நான் பிந்தினவருந்தானே; என்னைத்தவிரத் தேவன் இல்லையென்று, இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தரும், சேனைகளின் கர்த்தராகிய அவனுடைய மீட்பரும் சொல்லுகிறார். ஏசாயா 44:6

ஜீவ மன்னா

மே **20**

திங்கள்

## வாழ்வை புதிதாக மாற்றி புதிய காரியங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள் !

இன்றைய வேதவாசிப்பு


வெளி. 19 - 20

**"....புது ரசத்தைப் புது துருத்திகளில் வார்த்துவைப்பார்கள்,..."** (மத்தேயு 9:17)

அன்பார்ந்த என் தேவ ஜனங்களே, மரணத்தை ஜெயங்கொண்டு உயிரோடெழுந்து இன்றும் நம் மத்தியில் ஜீவிக்கின்ற ஒரே தேவனாயிக்கிற இயேசுக்கிறிஸ்துவின் இனிய நாமத்தினால் இன்றும் இன்பமான நாளைப் பெற்ற மகிழ்ச்சியாய் வாழ வாழ்த்துகிறேன். உங்களுக்காக ஜீவனையே கொடுத்த இயேசுக்கிறிஸ்துவை நேசிக்கும் நீங்கள் பெரும் அதிர்ஷ்டசாலிகள். தேவனுடைய ஆசீர்வாதத்தை சுதந்தரிக்கும் நீங்கள் கலங்காதிருங்கள்.

தேவ பிள்ளைகளே, இனறு தேவன் உங்களுக்கு ஒரு புதிய காரியத்தை சொல்லப் போகிறார். மேலே தரப்பட்ட வேத வசனத்தின் மத்தேயு 9:17ல் புதுரசத்தை புது துருத்திகளில் வார்த்து வைப்பார்கள் என கூறுகிறது. இதை இன்றைய நாளில் ஆவியானவர் எனக்கு வெளிப்படுத்தினார். நாங்கள் எங்கள் வாழ்க்கையை புதிதாக மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். அப்போது தேவன் புதிய காரியங்களை எமது வாழ்க்கைப் பயணத்திலும் செய்வார். நாங்கள் எப்படி எங்கள் வாழ்வைப் புதிதாக மாற்றுவது என நீங்கள் அறிவீர்களா? நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றே எம்மை முழுவதுமாக நம் இரட்சகர் இயேசுக்கிறிஸ்துவின் திருக்கரங்களில் ஒப்புவிக்க வேண்டும்.எம் பாவங்கள் சாபங்கள் அவர் மூலமாகவே கழுவப்பட முடியும். அவர் பாவத்தின் சம்பளம் மரணம் என்ற தண்டனையை மாற்றும் பொருட்டு தேவக்குமாரனாக மனித உருவில் இம் மண்ணுலகில் அவதரித்தார். எங்களுக்காக தண்டனை அனுபவித்தார்.அவருடைய சரீரத்திலிருந்து வழிந்தோடிய பரிசுத்த இரத்தம் எம் பாவங்கள் மன்னிக்கப்படவும் சாபங்கள் நீங்கவும் பயன்பட்டது. அதனால் நாங்கள் பாவ மன்னிப்பை பெற்றுக்கொண்டோம்.

தேவ பிள்ளைகளே யாதொருவன் கிறிஸ்து இயேசுவுக்குள் ஜீவித்தால். ஆவன் புதுப்படைப்பாய் மாற்றப்படுகின்ற பழையவைகள் யாவும் நீங்கிப் போம் யாவும் புதிதாய் மாறும் என எழுதப்பட்டுள்ள பிரகாரமாய். நாம் எம் மீட்பர் இயேசுக்கிறிஸ்துவை எம் உள்ளத்தில் ஏற்றுக் கொள்ளும் போது எம் வாழ்க்கை புதிதாய் மாறும் இந்த மாறுதலைப் பெற்றுக் கொண்ட நாமனைவரும் பேறு பெற்றவர்கள். இந்த ஜீவ மன்னா இதழை வாசிக்கும் நீங்கள் என் வாழ்க்கை மாறுதலடைந்த போதும் என் வாழ்வில் ஆசீர்வாதம் எங்கே என்று கேட்கிறீர்களா? நான் இன்னும் புதிய ஆசீர்வாங்களை பெறவில்லையே என அங்கலாயிருக்கிறீர்களா? கவலைப்படாதீர்கள். அதைரியப்படாதீர்கள் உலக முடிவுபரியந்தம் உங்களோடிருக்கிறேன் என்றவர் இன்றும் உயிரோடு உங்களோடு இருக்கிறார். அவரையே விசுவாசத்தோடு தொடருங்கள். புது திராட்சை ரசம் புது துருத்திகளில் ஊற்றப்படும். ஊங்கள் மாறுதலடைந்த வாழ்க்கையில் ஏற்ற வேளையில புதிய காரியங்களை வழி நடத்தி வாழ்வை இனிமையாக மாற்றுவார். பொறுமையோடிருந்து புதிய அனுவங்களையும் பெற்று இயேசுக்கிறிஸ்துவக்குள் மகிழ்ந்திருங்கள்.



அன்பின் தேவனே இன்றைய நாளில் இந்த செய்திக்காக ஸ்தோத்திரம் மாறுதலடைந்த என் வாழ்வில் புதிய காரியங்களை காண முடியவில்லையே என கலங்கி என்னை உங்கள் வசனங்களால் தேற்றியபடியால் நன்றி. ஏன்னை பெலப்படுத்தி காத்திருந்து பெறுக்கொள் கிருபை தந்தபடியால் ஸ்தோத்திரம் இயேசுவின் நாமத்திற்கே மகிமை ஆமென்.

---

அவர் அவாந்தரவெளியைத் தண்ணீர்த்தடாகமாகவும்,
வறண்ட நிலத்தை நீரூற்றுகளாகவும் மாற்றி, சங்கீதம் 107:35

ஜீவ மன்னா

மே 21

செவ்வாய்

# தேவ அபிஷேக வல்லமையால் நிரம்பியிருந்த எலிசாவின் எலும்புகள !

இன்றைய வேதவாசிப்பு

வெளி. 21 - 22

**"அப்பொழுது அவர்கள், ஒரு மனுஷனை அடக்கம்பண்ணப்போகையில், அந்தத் தண்டைக் கண்டு, அந்த மனுஷனை எலிசாவின் கல்லறையில் போட்டார்கள்; அந்த மனுஷனின் பிரேதம் அதிலே விழுந்து எலிசாவின் எலும்புகளின்மேல்பட்டபோது, அந்த மனுஷன் உயிரடைந்து தன் கால்களை ஊன்றி எழுந்திருந்தான்."**

(2 இராஜாக்கள் 13:21)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே ஜீவனுள்ள இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு இன்றும் இனிய நாளாகட்டுமென வாழ்த்துகின்றேன். அகிலமனைத்தையும் படைத்து ஆளுகை செய்கின்ற தேவ பிதாவானவர் அதிவிசேஷ தேவன் மனித உடம்பின் உள்ளார்ந்த உருவமைப்புக்களும் அதன் செயற்பாடுகளும் மிகவும் அற்புத வண்ணமாகவே அமைந்திருக்கின்றது.தேவனாக இருக்கின்றார் மனிதன் பிறக்கும் நாளையும் இறக்கும் நாளையும் தேவனே நிர்ணயிக்கின்றார்.

தேவ பிள்ளைகளே மேலே குறிப்பிட்டுள்ள 11 இராஜாக்கள் 13:21ல் இஸ்ரவேலருக்கு விரோதமாக மோவாபியர் தேசத்திற்குள் வந்திருந்த வேளை இஸ்ரவேலர் ஒரு மனுஷனை அடக்கம் பண்ணப் போகையில் மோவாபியரின் யுத்த படையினரைக் கண்டு இறந்த மனிதனின் உடலை எலிசாவின் கல்லறையில் போட்டு விட்டு ஓடிய வேளை அந்த மனிதன் உயிரடைந்து தன் கால்களை ஊன்றி எழுந்திருந்தான் என கூறப்பட்டுள்ளது. இன்னுமாக அதே அதிகாரத்தில் 13:20ன் இஸ்ரவேல் தேசத்திற்கு மோவாபியர் நுழைந்து எலியா மரித்து அடக்கம் செய்யப்பட்டு ஒரு வருடத்திற்கு பிறகு என்பதனை நாம் அறிந்துக் கொள்ளக் கூடியதாகவிருக்கின்றது ஒரு வருடம் கடந்த பின்னரும் எலிசாவின் சரீரத்தில் காணப்பட்ட அபிஷேகம் அவரது எலும்புகளில் இருந்தமை ஆச்சரியமாக இருக்கின்றதல்லவா? இதில் நாம் காண்கின்ற விஷேட தன்மை என்னவெனின் தேவன் நமக்களிக்கும் அபிஷேகம் நாம் இவ்வுலகில் வாழ்கின்ற வரைமட்டுமல்லாது எங்கள் மரணத்தின் பின்னரும் உள்ளார்ந்த எமது சரீரத்தில் தேவனின் அபிஷேகமானது தொடர்ந்திருக்கும். எம்மால் விசுவாசத்தையும் விட மேலானதொன்றாகும். அது எமக்கு விசுவாசிக்க அரிதான காரியமாகும்

தேவ பிள்ளைகளே நீங்கள் மனங்கலங்க வேண்டாம் அந்த மிக வல்லமையான தேவன் உங்களோடு இருப்பாராக எலியா தீர்ககதரிசியின் அபிஷேக வல்லமை இரட்டிப்பாக வேண்டுமென எலிசா கேட்டு தேவனிடம் எலியா தீர்க்கதரிசியின் தேவ அபிஷேகத்தை இரட்டிப்பாக பெற்றுக்கொண்டார். ஆகையால் எலியா தீர்க்கதரிசி 07 அற்புதங்கள் செய்தார்.எலிசா தீர்க்கதரிசி 10 அற்புதங்களைச் செய்தார். தேவப் பிள்ளைகளே உங்களுக்கும் தேவ அபிஷேகம் வேண்டுமா? நீங்களும் உற்சாகத்தோடும் மிக ஆவலோடும் எலிசாவைப் போல தேவனிடம் கேளுங்கள் அப்பொழுது தேவன் உங்களை தன் ஆவியின் அபிஷேகத்தினால் நிரப்பவார். வாழ்க்கையில் நீஙற்கள் முகங் கொடுக்க வேண்டியப பல விதமான பிரச்சினைகள் உபத்திரவங்கள், தடைகள், சவால்கள், போன்றவைகளால் மனமுடைந்து, சோர்வடைந்து, ஆத்மீகத்தில் பின்மாற்றமடைந்து இருக்கின்றீர்களா? எலிசாவின் எலும்புகளில் கூட அபிஷேக வல்லமையை வைத்த தேவனின் தேவ ஆவியானவர் உங்களுக்குள்ளும் இருக்கின்றாரல்லவா? தேவன் உங்களுக்குள் கிரியை செய்ய இடங்கொடுங்கள் தேவன் இன்றைய நாளில் உங்கள் வாழ்க்கையில் அற்புதங்களைச் செய்வாராக இன்று வெற்றிகரமான நாள்.



என் தேவனே நீங்கள் எலிசாவின் தேவன் நீங்கள் எலிசாவிற்கு கொடுத்த அபிஷேகம் அவரது எலும்புகள் எல்லாம் நிறைந்திருந்தது தேவனே நீங்கள் எலிசாவிற்கு கொடுத்த வல்லமை அபிஷேகத்தைப் போன்று என்னையும் அபிஷேகத்தால் நிரப்பும் தேவனே என் மூலமாகவும் அற்புதங்களை செய்யுங்கள் இயேசுவின் நாத்தில் ஆமென்.

---

கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்,
அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்கதரிசனஞ்சொல்லுவார்கள்;
உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்;
அப்போஸ்தலர் 2:17

ஜீவ மன்னா
மே 22
புதன்

**எமது பரிசுத்தமே தேவ அன்பிற்குள் எம்மை இணைக்கும் !**


இன்றைய வேதவாசிப்பு
ஆதியாகமம்
01 - 02

**“நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லைஞு நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன்ஞு நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை.”** (யோசுவா 1:5)

அருமையானவர்களே ஜீவிக்கின்ற இயேசுவின் நாமத்தில் இன்றும் உங்களுக்கு அதிர்ஷ்டகரமான நாளாகட்டுமென வாழ்த்துகிறேன். வானத்தையும் பூமியையும் அதிலுள்ள யாவற்றையும் படைத்தது ஆளுகைசெய்கின்ற சர்வபராக்கிரமுள்ள, மகத்துவமுள்ள தேவனின் அவதானத்தை நீங்கள் பெற்றுக்கொள்ள நீங்கள் எவ்வளவு பாக்கியமுள்ளவர்கள் என சற்று சிந்தித்து பாருங்கள். நீங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்ட நாள் தொடக்கம் இன்றுவரை தேவன் உங்களை “கண்ணின் மணியைப் போல காத்து வருகின்றார் என்பதனை விசுவாசிக்க முடிகின்றதா? “நீங்கள் உள்ளம் கலங்காதிருங்கள்”.

தேவ பிள்ளைகளே உங்களை தேவன் அதிகமாக நேசிக்கின்றார் ஆனாலும் ஒரு விஷேசித்த நிபந்தனை மாத்திரம் உள்ளது என்னவென்றால் உங்கள் தேவன் பரிசுத்தமான தேவனாகையால் நீங்கள் தேவனோடு நெருங்கி வாழ்வதற்கு உங்களுக்குள் பரிசுத்தம் காணப்படவேண்டும். நீங்கள் பரிசுத்த வாழ்க்கை வாழ வேண்டும் தேவன் அதனையே எதிர்பார்க்கின்றார். ஆதைத் தவிர வேறெந்த காரணத்தினாலேயும் தேவன் உங்களைவ விட்டு விலகமாட்டார் என முழு இருதயத்தோடு விசுவாசியுங்கள் ஏனெனில் நீங்கள் பரிசுத்தராய் இருங்கள். ஏனென்றால் தேவனாகிய நான் பரிசுத்தர் நீங்கள் என்னுடைய ஜனங்களாகும்படி சகல ஜாதிஜனங்களுக்குள் உங்களைப் பிரித்தெடுத்தேன் என்று எழுதப்பட்டுள்ளமையால் பரிசுத்தத்தை தவிர வேறொன்றையும் தேவன் சிந்திப்பதில்லை உங்கள் விரோதியான “சத்துருவானருக்கு” தேவைப்படுவது உங்கள் வாழ்க்கையில் உங்கள் பரிசுத்தத்தை கலங்கப்படுத்தி உங்களை தேவனிடமிருந்து “தேவ அன்பிலிருந்து விலக்கி தூரப்படுத்துவதாகும். நீங்கள் இன்னுமாய் “விழித்திருந்து பூரண ஆத்மீகராகி விடுங்கள்.”

தேவப் பிள்ளைகளே பிள்ளைகள் பெற்றோர்களுக்கிடையில் சில சில குழப்பங்கள் காரணமாகக் கருத்து வேறுபாடுகள் ஏற்படுமிடத்து பெற்றோர்கள் பிள்ளைகளைத் “தண்டிக்கும் சந்தர்ப்பங்கள் பெரும்பாலும் ஏற்படுவதுண்டு ஆனாலும் பெற்றோர்கள் பிள்ளைகளை விலக்கி வைக்காமலும் கோபம் கொள்ளாமலும் இருப்பது பிள்ளைகள் மேல் வைத்திருக்கும் “அளவற்ற அன்பினாலாகும் உங்கள் தேவானவர் உங்களை அதற்கு அதிகமாக நேசிப்பதனால் உங்களது வாழ்க்கைப் பாதையில் சில உபத்திரவங்களை அனுமதிப்பார் உங்கள் தேவன் கை விடவும் உங்களை விட்டு விலகிப் போய் விடவும் மாட்டார். இன்றைய நாள்வரைக்கும் உங்கள் ஆத்மீக பயணத்தில் முன்னோக்கி வந்து உங்கள் பெலத்தினாலும் உங்களுடைய முயற்சியினாலுமல்ல தேவன் உங்களை முன்னோக்கிக் கொண்டு வந்தார். எதிர்காலத்திலும் மாறா தேவன் அப்படியே உங்களோடிருப்பார் நீங்கள் பெலத்துடன் தைரியத்துடன் முன் பயணம் செல்லுங்கள். இன்று வெற்றிகரமான நாள்.



என் தேவனே நீர் எங்களை விட்டு விலகாத தேவன் நீங்கள் என்னை அநாதி சிநேகத்தால் என்னை சிநேகிக்கிறபடியால் ஸ்தோத்திரம் உங்களிடமிருந்து என்னை பிரிக்கும் சாத்தானிடமிருந்து என்னைக் காத் துக் கொள்ளுங்கள் இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

---

நான் இஸ்ரவேலின் பரிசுத்தரும்,
உன் இரட்சகருமாயிருக்கிற உன் தேவனாகிய கர்த்தர்; உன்னை மீட்கும்பொருளாக எகிப்தையும், உனக்கு ஈடாக எத்தியோப்பியாவையும் சேபாவையும் கொடுத்தேன். ஏசாயா 43:3

ஜீவ மன்னா

மே 23

வியாழன்

## உங்களுக்காக மத்தியஸ்தம் பண்ணுகிறது இயேசு கிறிஸ்து!

இன்றைய வேதவாசிப்பு


ஆதியாகமம் 03 - 04

**"தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே."**
(1 தீமோத்தேயு 2:5)

அன்பார்ந்த தேவப் பிள்ளைகளே இயேசு கிறிஸ்த்துவின் வல்லமையான நாமத்தில் இன்றைய நாளும் உங்களுக்கு சகல நன்மைகளாலும் நிரம்பிய நல்ல நாளாக வேண்டுமென பிரார்த்திக்கின்றேன் தேவ பிள்ளைகளே இவ்வுலகில் இரண்டு காரியங்கள் நடைபெறுவதை நீங்கள் அறிவீர்களா? அதில் ஒன்று என்றால் தேவனுடைய கருணையால் நடைபெறும் நற்காரியங்களாகும் தேவ கோபத்தினால் மனிதருக்கு அல்லது நாட்டிற்கு ஏற்படும் ஆபத்து உபத்திரவங்கள், பரச்சினைகளிலிருந்து, காப்பாற்ற இந்த உலகில் எந்தவொரு மனிதனுக்கோ, எந்தவொரு அரசாங்கத்திற்கோ முடியாது. ஆனாலும் ஜீவ மன்னா அனுதினமும் தியானங்களை வாசிக்கும் நீங்கள் அதிர்ஷ்டக்காரர்கள்.

தேவ பிள்ளைகளே மேற்குறிப்பிட்ட தீமோத்தேயு 02:05 தேவ வசனத்தின்படி உங்களுக்காகவும் உங்களின் காரியங்கள் நிமித்தமாகவும் மத்தியஸ்தராக இயேசு சுவாமி பரலோகத்தினின்று செயலாற்றுகிறார் எமக்காகப் பரிந்து பேசுகினறார். இயேசுக்கிறிஸ்து தேவனின் வலது பக்கம் வீற்றிருக்கின்றார். நீங்கள் பெலத்தோடும், தைரியத்தோடும் இருங்கள் உதாரணமாகக் கூறினால் நீதிமன்றத்தில் உங்களுக்காக பேசுவதற்கு மத்தியஸ்தம் செய்வதற்கு உங்களுக்காக உங்கள் சார்பாக இருப்பதற்கு ஒரு சட்டத்தரணி அவசியமாகும். ஆனாலும் அவர் உங்களுக்காக மத்தியஸ்தம் செய்வது நீங்கள் அவருக்காக கிரயத்தைச் செலுத்தினால் மாத்திரமே. நீங்கள் செலுத்த வேண்டியது அவர் நியமித்த விலைக் கிரயம் மாத்திரமே. அதைவிட குறைவாக உங்களுக்குச் செலுத்த முடியாது. உங்களுக்காக மத்தியஸ்தம் பண்ணுகின்ற இயேசுக்கிறிஸ்த்து உங்களுக்கு தன்னால் செலுத்த முடிந்தளவு விலைக் கிரயத்தை செலுத்தினார்.இப்பொழுது நீங்கள் தேவனுக்கு கிரயத்தைச் செலுத்த அவசியமில்லை தேவன் உங்களுக்காக கிரயத்தைச் செலுத்தி பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதோடு எங்களுக்காக பரிந்து பேசுகின்றார்.

தேவ பிள்ளைகளே ஆகையால் உங்கள் தேவன் இயேசு சுவாமி எவ்வேளையிலும் மத்தியஸ்தம் பண்ணுவதால் தேவன் உங்களை மன்னிக்கின்றார். தேவனின் இரக்கத்தை பெற்றுத் தருகின்றார் இப்படியாக எல்லா வேளையிலும் உங்கள் சார்பாக இருந்து நீங்கள் தெரிந்து செய்கின்ற தெரியாமல் செய்கின்ற சிறிய பெரிய தவறுகள் குறைபாடுகள் அனைத்திற்கும் மகத்துவமான தேவனிடம் மன்னிப்பைப் பெற்றுத் தருவதற்கு மத்தியஸ்தம் பண்ணுவதால் நீங்கள் அறிந்தோ அறியாமலோ பிழை செய்வதை முற்றிலுமாக தவிர்த்துக்கொள்ளுங்கள். தேவன் உங்கள் உள்ளத்தை காண்கின்ற தேவனாகையால் நீங்கள் பரிசுத்தமாக, உண்மையாக வாழ முற்படுங்கள். தேவன் உங்களோடு உங்களுக்கு வெற்றியின் நாள்.



என் தேவனே உங்கள் திருக்கமரணக்காக நன்றி. தேவன் எமக்காக இவ்வுலகிற்கு வந்து என் பாவங்களின் நமித்தம் முடிந்தளவு கிரயத்தைச் செலுத்தினார். என் சார்பாக இருந்து என்னை மத்தியஸ்தம் பண்ணுங்கள். உங்கள் இரக்கத்தினால் என்னை நிரப்புங்கள். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

---

*ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல்செய்கிறவரும் அவரே.*
ரோமர் 8:34

ஜீவ மன்னா

மே 24

வெள்ளி

## உங்கள் நாவில் இயேசு என்னும் நாமத்தை அறிக்கையிடுங்கள் !

இன்றைய வேதவாசிப்பு

ஆதியாகமம் 05 - 06

**"இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது;"** (மத்தேயு 15:8)

அன்பு மிகு தேவ பிள்ளைகளே; இன்றும் உங்களுக்கோர் இனிய காலைப பொழுதிற்காகவும் , இன்றைய அருமையான நாளுக்கு வாழ்த்து கூறும்படியாகவும் உங்கள் இல்லத்திற்கு வந்துள்ளேன். உலகத்தின் வாழ்கின்ற கிறிஸ்தவ ஜனங்கள் மத்தியிலும், நீங்கள் மிகவும் அதிர்ஷ்டமானவர்கள். தாயின் கர்ப்பத்திலேயே உங்கள் உருவமானது எப்படி இருக்க வேண்டுமென்பதும் குறிக்கப்பட்ட நாளில் நீங்கள் தேவ இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க வேண்டும் என்பதையும் தேவனே திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி உங்களை வெற்றிகரமான பாதையில் கொண்டு செல்வாராக.

தேவ ஜனங்களே, கனம் பண்ணினாலும் அவர்கள் இருதயமோ என்னை நேசிக்காது, என்னை விட்டு தூரமாக விலகியிருக்கிறது என தேவன் துக்கப்படுவதை மேற்கூரிய மத்தேயு 15:8ல் காண்கிறோம். இயேசு என்னும் நாமத்தை நாம் முழு இருதயத்தோடு கூறுகின்ற வேளை வல்லமையான அந்நாமத்திற் கூடாக பல்வேறு அற்புத காரியங்கள் நடை பெற்றன என புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் காண்கிறோம். யோவான் 14:14ல் என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன் எனக் கூறியிருக்கிறார். அப்போஸ்தலர் 03ம் அதிகாரத்தில் பேதுருவும் யோவானும் தேவாலய வாசலண்டை வருகின்ற வேளை பிறப்பிலேயே சப்பாணியொருவன் ஏதாகிலும் கிடைக்குமென அறிந்து இவர்களிடம் பிச்சை கேட்ட வேளை பேதுரு அவனை நோக்கி வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகின்றேன் இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் நீ எழுந்து நட என்று சொல்லி வலது கையினால் அவனைப் பிடித்து தூக்கி விட்டான். உடனே அவனுடைய கால்கள் பெலன் கொண்டது.

ஆகையால் தேவ பிள்ளைகளே; நாம் எல்லா வேளையிலும் எமது உதடுகளால் மாத்திரமல்லாது முழு உள்ளத்தோடு மகிமைப்படுத்தம் வேளை நாம் இயேசு என்று கூறுகையில் பல அற்புதங்களைச் செய்ய வல்லமையுடையவராய் இருக்கின்றார். தேவ பிள்ளைகளே நீங்கள் கூட உங்கள் வாழ்க்கையில் வரும் பிரச்சினை, துன்பம், வேதனை கண்ணீர் சூழ்கின்ற வேளைகளில் "இயேசு என்னும் நாமத்தை கூறி ஜெபியுங்கள் நிச்சயமாக அந்த ஜெபத்திற்கு தேவனிடம் பதிலுண்டு. இயேசு என்னும் வல்லமையான நாமத்திற்கு நிகராக வேறெந்த நாமமும் இல்லை. ஜப்பானில் ஆசிரியர் ஒருவர் "இயேசு" என்னும் நாமத்தை ஒரு சிறுமிக்கு சொல்லிக் கொடுத்தாராம். துண்ணீர் பரிசோதனையின் போது அந்த சிறுமியிடம் தெரிந்த ஒரு வார்த்தையைச் சொல்லும்படியாக பரிசோதகர்கள் வினாவிய போது அச் சிறுமி இயேசு என்ற கூறினாராம். அப்போது அத் தண்ணீர் அற்புத வண்ணமாக மிளிரத் தொடங்கியதாம் எல்லோரும் ஆச்சரியப்படும் வண்ணமாக அத்தண்ணீரில் ஒளி காணப்பட்டதென்று அறிந்தோம். ஆகையால் உங்கள் வாழ்க்கையில் மாற்றத்தைக் காண இயேசு என்னும் வல்லமையான நாமத்தை சொல்லுங்கள். பிரச்சினைகளைகளின் போது இயேசு எனும் நாமத்தை அறிக்கையிடுங்கள் எல்லாம் முற்றிலுமாக மாறிவிடும். இன்றும் இயேசு உங்களோடிருக்கிறார்.



என் பிதாவே எமது இருதயமானது உம்மை விட்டு தூரமாக போய் விட்டதை எண்ணி மனங்கலங்கி அழுது உங்கள் பரிசுத்த பாதத்தை இறுகப் பிடித்துக் கொண்டேன். இயேசுவின் நாமத்தில் எல்லாவற்றையும் மாற்ற வரம் தாருங்கள். நீங்கள் என்னுடைய இயேசு தேவன் என்று எண்ணி மகிழ்கின்றேன் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

---

அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றுங் கேட்கமாட்டீர்கள். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே
பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்.
யோவான் 16:23

ஜீவ மன்னா

மே 25

சனி

## பாவம் உங்களை மேற்கொள்ளாது தடுக்கும் தேவ கிருபை !

இன்றைய வேதவாசிப்பு


ஆதியாகமம் 07 - 08

**“நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது.”** (ரோமர் 6:14)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே ஜீவிக்கின்ற இயேசுக்கிறிஸ்து நாமத்தில் உங்களுக்கு இனிமையான நாளாக வேண்டுமென வாழ்த்துகின்றேன். ஜீவ மன்னாவை இன்றைய நாளில் கரங்களில் வைத்திருக்கும் நீங்கள் அனைவரும் அதிர்ஷ்டமிக்கவர்களாவீர்கள், நீங்கள் சர்வபராக்கிரம தேவனின் சொந்த பிள்ளைகளாக இருப்பதாலும், இயேசுவின் பரிசுத்த இரத்தத்தினால் உங்கள் பாவங்கள் கழுவப்பட்டு நீங்கள் விடுதலை பெற்றிருப்பதினாலேயும் ஆகும். ஏனெனில் பாவத்தின் சம்பளம் மரணம் என்றும் “தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்” என்ற ரோமர் 6:23ல் எழுதப்பட்டுள்ளமையால் நீங்கள் தற்போது சத்துருவின் பாவமென்றும் அடிமைத்தனத்தினின்று பரிபூரண விடுதலை பெற்று விட்டீர்கள்.

தேவ பிள்ளைகளே நீங்கள் சந்தோஷமாயிருங்கள். நீங்கள் எல்லோரும் இயேசு சுவாமியின் “ கிருபைக்கு கீழ்ப்பட்டிருக்கிறபடியால் பாவம் உங்களை மேற் கொள்ளமாட்டாது” என்பது ரோமர் 6:14ல் குறிக்கப்பட்டுள்ள. ஏனென்றால் இயேசுக்கிறிஸ்துவை அறிந்துக் கொள்ள முன்னர் நீங்கள் இவ்வுலக பாவங்களில் மூழ்கி இருந்திருக்கலாம் உதாரணமாக மதுபானம் அருந்துதல், புகைப்பிடித்தல், போதை வஸ்து பாவித்தல், களவெடுத்தல், காம இச்சைகள், வேசித்தனம், பொய் சொல்லுதல், வஞ்சித்தல் ஆகியவைகளாகும். இயேசுக்கிறிஸ்துவை உங்கள் மீட்பர் ஏற்றுக் கொண்டதன் பிறகு இப்படியாக உங்களுக்கு விடுவித்துக் கொள்ள முடியாத பாவங்களினின்று விடுதலை பெற தேவன் உங்களுக்கு பெலனைக் கொடுப்பார். தேவன் தமத பரிசுத்த ஆவியினாலேயே உங்கள் வாழ்க்கையிலுள்ள சகல பலவீனங்களையும் அழித்து போடுவார். ஆதன் பிறகு அந்த பலவீனங்களின்று மீட்பை வெகு இலகுவாக பெற்றுக் கொள்வீர்கள். இப்படியே உங்கள் வாழ்க்கையில் உடனடி மாற்றம் ஏற்படுவதாக தேவனின் அருக்கிரகம் குறைவில்லாமல் கிடைக்கின்றதனாலாகும். ஆகையால் இதுவரையிலும் தேவனின் அருக்கிரகம் பெற்று பாவத்தில் விடுதலையாகி நீதிமானாக வாழ்கின்ற நீங்கள் எல்லா மனிதரின் மகா பெரிய ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்டவர்களாவீர்கள்.

தேவ பிள்ளைகளே உங்கள் நன்மை நிறைந்த வாழ்க்கையை, இனிமையான வாழ்க்கையை தீமைகள் உண்டுபன்னி கசப்பாக மாற்ற சாத்தான் எல்லா வேளையிலும் செயல்பட்டுக் கொண்டே இருப்பான். நீங்கள் இடைவிடாது ஜெபம் பண்ணி தேவ ஆவியில் நிறைந்து பெலனுள்ளவராக மாறுங்கள். அப்பொழுது சாத்தானின் தந்திரங்களுக்கு அகப்படாது அவைகளுக்கு விரோதமாக செயல்பட பெலனைத் தேவன் தருவார். உங்களுக்கு வெற்றிகரமான நாள்.



என்னுடைய தேவனே உங்கள் மகனான இயேசுக்கிறிஸ்துவுக்கூடாக நீங்கள் என்னை எல்லா பாவங்களிலிருந்தும் விலக்கிக் காத்துக் கொண்டபடியால் நன்றி என்னை உங்கள் பிள்ளையாக்கி உங்கள் தேவ ஆவியில் என்னை நிரப்பியமையால் ஸ்தோத்திரம். பிதாவே இன்றும் என்னை உங்கள் பெலனினால் நிரப்புங்கள் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

---

பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்;
ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான்;
பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்.
I யோவான் 3:8

ஜீவ மன்னா

மே 26

ஞாயிறு

## மனிதனின் இருதயத்தை ஆராய்ந்தறியும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு


ஆதியாகமம் 09 - 10

**"கர்த்தாவே, என்னைப் பரீட்சித்து, என்னைச் சோதித்துப்பாரும்; என் உள்ளிந்திரியங்களையும் என் இருதயத்தையும் புடமிட்டுப்பாரும்."** (சங்கீதம் 26:2)

என் அன்பார்ந்த தேவ பிள்ளைகளே, இன்று உங்களுக்கு மகிழ்ச்சிகரமான நாளாக வேண்டுமென பிரார்த்திக்கின்றேன். என்னையும் உங்களையும் தம் சொந்த ஜனங்களாக தேர்ந்தெடுத்த தேவனுக்கு என் முழுமனதோடு நன்றி கூறுகின்றேன். நாம் வாழும் இப்பூமியில் பலவிதமான ஜனங்கள் வாழ்கின்றதைக் காண்கிறோம்.அத்தோடு ஒவ்வொரு குடும்பங்களும் கொள்கைகளில், குனதிசயங்களில்,வித்தியாசமுள்ளவர்களாக இருக்கின்றனர். வாழ்க்கை முறைகள் வேறுப்பட்டதாக இருப்பதோடு ஏழை, பணக்காரன், என்ற பாகுபாடு, அதிகமாக காணப்படுகின்றது. மனிதர்கள் சமுதாயத்தில் மதிப்பு, நற்பெயர், புகழ் என்பவற்றை மிகவும் நேசிக்கத் தவறுவதில்லை. பரம்பரை பரம்பரையாக இருக்கும் சில விதமான பலவீனங்கள் அவர்களை விட்டு விலகுவதில்லை. அதே போல் சில குடும்பங்களில் உள்ள நற்குணங்கள் உற்சாகம், தைரியம் பரம்பரையாக வருவதும் உண்டு. உலகமே இவ்வண்ணமாக இருப்பினும் உள்ளத்தை காண்கிற தேவன் இவைகள் ஒன்றையும் நோக்குவதே இல்லை என்பதை உணர்ந்துக் கொள்ளுங்கள். தேவன் தேடுவது உண்மையான மனசாட்சியை உடைய பரிசுத்த மாசற்ற அன்பினால் நிறைந்த உள்ளத்தையே ஆகும்.

தேவ பிள்ளைகளே, சில தேவ பிள்ளைகள் உலத்திலுள்ளவைகளிலும், அதன் நீதிகளிலும் நிறைந்திருப்பார்கள். அவர்கள் தம்மால் சகலவற்றையும் செய்து சாதிக்க முடியுமென்ற எண்ணத்தோடு செயல்படுகையில் எல்லாம் தோல்வியிலே முடியும் வேளை இறுதியாக தேவ பாதத்திற்கு வருவார்கள் அப்படி இல்லாவிடின் "போதகரே எனக்கு ஜெபியுங்கள் தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை எல்லாம் தேவனால் முடியும் தானே" என்று அவர்களது எல்லா பிரச்சினைகளையும் ஒரு நிமிடத்தில் என்னிடம் கூறி விடுவார்கள். ஆனாலும் ஏதாவதொரு காரியத்தை செய்வதற்கு முன்னரே தேவனின் பாதத்தில் வைத்து ஜெபிப்பவர்கள் சில தேவ பிள்ளைகள் மாத்திரமே என எனது 29 வருட ஆவிக்குரிய அனுபவத்தில் நான் நனகறிவேன். ஆவர்கள் நன்றாக பண்படுத்தப்பட்ட நிலத்தில் ஆழமாக விதை விதைத்தவர்கள் ஆவார்கள் அப்படிப்பட்ட பிள்ளைகளின் ஜெபத்திற்கு தேவன் தாமே உடனடி பதில் கொடுத்து அவர்களை ஆசீர்வதித்து உயர்த்துவாராக.

தேவ பிள்ளைகளே மேலே கூறப்பட்ட வேதாகம வசனத்தில் சங்கீதக்காரர் ஆகிய தாவீது ராஜா " கர்த்தாவே என்னைப் பரீட்சித்து என்னைச் சோதித்துப்பாரும் என் உள்ளிந்திரியங்களையும் என் இருதயத்தையும் புடமிடப்பாரும் என்று தேவனிடம் கூறுகின்றார் இவ் வேளையில் உங்கள் சிக்கலான பிரச்சினைகள் என்னவென்று நீங்கள் யோசித்துப் பாருங்கள். அவைகள் அனைத்தும் தேவனின் ஆலோசனைகளைக் கேட்டு ஆரம்பிக்கப்படாதவைகளின் பிரதிபலன்கள் என்பது தெளிவாகும். இனிமேல் எல்லா காரியங்களையும் தேவனின் பாதத்தில் வைத்து ஜெபத்தோடு ஆரம்பியுங்கள். உங்கள் உள்ளத்தை ஆராய்ந்து பார்க்கும் தேவனானவர் உங்கள் விருப்பத்திற்கு மேலாக ஆசீர்வதிக்க வல்லமையுடையவராவார். வெற்றிகரமான நாள்.



என் தேவனே என் சிந்தனைக்கு உடன்படாத பல காரியங்களைச் செய்துள்ளேன். என் உள்ளத்தை எனக்குத் தாரும். என்னை என் பிரச்சினைகளின்று மீட்டுக் கொள்ளுங்கள். இயேசு நாமத்தில் ஆமென்.

---

அவளுடைய பிள்ளைகளையும் கொல்லவே கொல்லுவேன்;
அப்பொழுது நானே உள்ளந்திரியங்களையும் இருதயங்களையும்
ஆராய்கிறவரென்று எல்லாச் சபைகளும் அறிந்துகொள்ளும்;
அன்றியும் உங்களில் ஒவ்வொருவனுக்கும் உங்கள் கிரியைகளின்படியே பலனளிப்பேன்.
வெளி. 2:23

ஜீவ மன்னா
மே 27
திங்கள்

# அரச பதவியை விட தேவ சமூகத்தைத் தேடிய தாவீது ராஜா !

இன்றைய வேதவாசிப்பு
ஆதியாகமம்
11 - 12

**"தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும். உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும்."**
(சங்கீதம் 51:10,11)

அன்பார்ந்தவர்களே, ஜீவனுள்ள இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் இன்று உங்களுக்கு நல்ல நாளாக வேண்டுமென்று நான் வாழ்த்துகிறேன். இன்றைய நாளில் நீங்கள் தேவ சமூகத்தை மிகவும் மனமகிழ்வோடு, வாஞ்சையோடு தேட வேண்டுமென்பதையே கூற முன் வந்துள்ளேன். மனிதர்களுக்கு மிகவும் சிறிய ஒரு பதவி கிடைத்ததா? பதவியிலே உயர்வு கிடைத்ததா அதற்கு அவர்கள் முழு இருதயத்தோடு நன்றி சொல்லவேண்டும். அப்படி கிடைத்த சிறியதொரு பதவி, உயர்வு என்றாலும். அதை சரியாக நிறைவேற்றாதபடி தனக்கு கிடைத்த அந்த சிறியதொரு பதவி. உயர்வு என்றாலும். அதை சரியாக நிறைவேற்றதபடி தனக்கு கிடைத்த அந்த சிறியதொரு அதிகாரமாயினும் பல நேரங்களில் உதாசீனமாக நிறைவேற்றுகின்ற வேளைகளும் உண்டு. மற்றவர்களுக்கு தன்னை உயர்வுப்படுத்தி காட்டுவதற்கு முயற்சி செய்கின்றார்கள். சில வேளைகளில் ஆத்மீக பிள்ளைகள் கூட அப்படிப்பட்ட நேரங்களில் தன்னை மற்றவர்களை விட மேலான அந்தஸ்து உடையவர்கள் என காட்டுவதை காணக் கூடியதாக இருக்கின்றது.

தேவ பிள்ளைகளே, அப்படி தற்பெருமை அகங்காரம், இவைகளோடு செயலாற்றுபவர்கள் அல்ல சிற பிள்ளைகளைப் போல மனங் கொண்டு நடப்பவர்கள், செயல்படுபவர்கள் பாக்கியவான்கள். என்று நினைக்கிறேன். அது எனது 29 வருட ஆவிக்குரிய வாழ்வில் நான் கண்ட அனுபவமாகும். முதலாவதாக தேவ இராஜ்ஜியத்தையும், அதன் நீதியையும் தேடுங்கள். மற்றவையெல்லாம் தாமாகவே கொடுக்கப்படும் என்ற வசனம் கூறுகிறது. ஆகையால் நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாவோம். அப்படியே பழைய ஏற்பாட்டில் உபாகமம் 28:2ல் நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்திற்குச் செவி கொடுக்கும் போது இப்பொழுது சொல்லப்படும் ஆசீர்வாதங்களெல்லாம் உன்மேல் வந்த உனக்குப் பலிக்கும் என எழுதப்பட்டுள்ளது. ஆகையால்பிள்ளைகளாகிய எமக்கு ஆசீர்வாதங்களும் உயர்வும் தேடி வரும். நூம் அவைகளைத் தேடி போக வேண்டிய அவசியமில்லை.உலக மனிதர்கள் அப்படி தேடி போகின்றார்களெனினும் எங்கள் பரலோக படைப்பின் தேவனின் பிள்ளைகளாகிய எமக்குத் கொடுத்துள்ள பொருத்தனையின்படி நாங்கள் தேவனைத் தேடும் வேளை எங்களுக்குத் தேவையான ஆசீர்வாதங்கள் எம்மைத் தேடி வரும் எனபதாகும். ஏனென்றால் தேவன் வல்லமையுடையவர்.

தேவ பிள்ளைகளே உங்களிடம் ஏதாவதொரு ஊழியத்தை எதிர்ப்பார்த்து அல்லது ஒரு விஷேட காணிக்கைகள் அல்லது வரப்பிரசாதங்களை எதிர்ப்பார்த்து தேவன் ஆசீர்வதிப்பதில்லை. ஆனால் தேவனது பிள்ளைகள் எப்பொழுதும் மேலாக மற்றவர்களின் கௌரவத்தைப் பெற்று இருப்பதைக் காண விருப்பமுடையவராகையால் உங்களை எல்லா வேளையிலும் ஆசீர்வதிக்க எதிர் பார்த்துக்காத்துக் கொண்டிருக்கின்றார். மேல் கூறப்பட்ட சங்கீதம் 5110லு் தேவ வசனத்தை நோக்கும் போது தாவீது அரசன் தமக்குக் கிடைத்த அரச பதவியை விட அதை பெற்றுக் கொடுத்த தேவனின் சமூகத்தையே மிகவும் வாஞ்சையுடன் தேட விரும்புவதாகக் கூறுவதைக் காண்கின்றோம். நீங்களும் நானும் கிடைத்த பதவி, சுகம் உடமைகள் ஆகியவைகளுக்கு எமது மனதை பறிகொடுக்காமல் தேவ சமூகத்தை ஆவலோடு தேடுவோமாக அப்பொழுது நீங்கள் நினையாத காரியங்களை தேவன் வாய்க்கப் பண்ணுவார் இன்று வெற்றிகரமான நாள்.



தேவனே நீங்கள் என்னை படைத்த தேவன் உடமைகள், கௌரவம் உங்களிடமே உள்ளதென்பதை நானறிவேன். தேவனே என்னை ஆசீர்வதிக்க உம்மால் மாத்திரமே முடியும். என் வாழ்க்கையை உங்களிடம் அர்ப்பணிக்கிறேன். உங்களை மென் மேலும் தேடுவதற்கு உதவி செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

---

அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்;
என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன்.
சங்கீதம் 91:14

ஜீவ மன்னா

மே 28

செவ்வாய்

# சமுத்திரத்தில் அலைகளின் இரைச்சலை அமர்த்தும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

ஆதியாகமம் 13 - 14

**"சமுத்திரங்களின் மும்முரத்தையும் அலைகளுடைய அலைகளின் இரைச்சலையும், ஜனங்களின் அமளியையும் அமர்த்துகிறீர்."** (சங்கீதம் 65:7)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே ஜீவிக்கின்ற எங்கள் இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு இனிமையான நாளாக வேண்டுமென பரார்த்திக்கின்றேன். சர்வ வல்லமை படைத்த தேவனின் பரிசுத்த வசனங்கள் அடங்கிய "ஜீவ மன்னா" ஆவிக்குரிய சஞ்சிகை உங்கள் கரங்களுக்கு கிடைத்திருப்பதால் நீங்கள் அதிர்ஷ்டக்காரர்கள் ஏனெனில் இதை நீங்கள் தினந்தோரும் தவறாது வாசிக்கின்ற வேளை, உங்களை அறியாமலே உங்கள் வாழ்க்கை தேவ வசனத்திற் கூடாக பரிசுத்தப்பட்டிருக்கும் அப்பொழுது நீங்கள் பூரண நீதிமானாய் மாறுவீர்கள்.

தேவ பிள்ளைகளே, எங்கள் ஆத்மீக பயணத்தைக் குறித்து கஷ்டமான, வேதனை நிறைந்ததென்றும், இது சோதனையோடு கூடிய பயணம் என்றும் கூறுகின்றார்கள். ஆனாலும் நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? நீங்கள் என்ன கூறினாலும் நான் உங்களுக்கு சொல்லுகிறதாவது, "உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக" என்றேயாகும் ஏனெனில் சங்கீதம் 65:7ல் தேவ வசனம் எங்களுக்கு கூறுகின்றது அவர் மகா வல்லமையுள்ள தேவன் என்றல்லவா? அப்படியானால் அங்கே "தேவன் சமுத்திரங்களின் மும்முரத்தையும் அவைகளுடைய அலைகளின் இரைச்சலையும் , ஜனங்களின் அமளியையும் அமர்த்துகிறீர்" என்று எழுதப்பட்டுள்ளதல்லவா சிறிதும் பெரிதுமான மச்சங்கள் எண்ணிலடங்காது காணப்படும். சிறியதும் பெரிதுமான கப்பல்கள் பயணிக்கும் விசாலமான மகா சமுத்திரத்தின் கொந்தளிப்பையும் தேவனால் அடக்கி தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியுமானால் "தேவன் எவ்வளவு மகாவல்லமையுள்ளவா" எனபதை சற்று சிந்தித்துப் பாருங்கள். "விசாலமான சமுத்திரத்தை" படைத்தவரும் தேவனே.

தேவ பிள்ளைகளே, பெரிதான சமுத்திரத்தில் உருவாகும் கொந்தளிப்பு, சூறாவளி, ஆகியவைகளை தேவனுக்கு நிறுத்த முடியமானால் தேவனின் சிருஷ்டிப்பாகிய மிகவும் சிறிய மனிதர்களாகிய எங்கள் வாழ்க்கையில் அன்றன்று உருவாகும் பிரச்சினை, சிக்கல்கள், வேதனைகளுக்கு தீர்வைக் கொடுக்க, நிர்மூலப்படுத்தி அகற்ற தேவனுக்கு முடியாதா என சிந்தித்து பாருங்கள். அது தேவன் மனிதருக்குச் செய்கின்ற "உபகாரமல்ல" தேவன் தனது சொந்த பிள்ளைகளுக்கு காட்டுகின்ற பேரன்பின் வெளிப்பாடு என்றே சொல்லலாம். நாங்கள் தேவனின் மந்தைகள் என்றும் தேவனானவர் "மந்தைகளின் மேய்ப்பன்" என்றும் நாங்கள் தேவனின் விலைமதிக்க முடியாத சொத்து என்றும் தேவனே எமது உடமைகள் எனறும் எழுதிருப்பதனால், தேவன் எங்களை மிகவும் நேசிக்கின்றார் என்பதும். நாங்களே தேவனுக்கு மிகவும் "அருமையானவர்கள்" என்றும் உறுதியாகின்றது. ஆகையால் மகா சமுத்திரமான உங்கள் உள்ளத்தை "கொந்தளிக்க" இடங் கொடாதீர்கள். உங்கள் தேவனாகிய இயேசுவின் நாமத்தில் அவைகளை நிர்மூலமாக்கி ஜெபம் செய்யுங்கள். எல்லாம் செயலற்று போகும். இனறைய நாளிலும் சந்தோஷத்தினால் தேவன் உங்களை நிரப்புவாரக வெற்றிகரமான நாள்.



**என் தேவனே நீங்கள் சமுத்திரத்தின் அலைகளின் இரைச்சலையும் அமர்த்துகிற தேவன். நீங்கள் படைப்பின் தேவனாகையால் அவைகள் உங்களுக்கு கீழ்ப்படிகின்றன தேவனே என்னுடைய வாழ்க்கையில் காணப்படும் எல்லா சூறாவளிகள், வெள்ளப்பெருக்கு ஆகியவற்றை நிர்மூலப்படுத்தும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.**

---

துன்மார்க்கரோ கொந்தளிக்கும் கடலைப்போலிருக்கிறார்கள்; அது அமர்ந்திருக்கக்கூடாமல், அதின் ஜலங்கள் சேற்றையும் அழுக்கையும் கரையில் ஒதுக்குகிறது. துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று என் தேவன் சொல்லுகிறார். ஏசாயா 57:20,21

ஜீவ மன்னா

மே 29

புதன்

**தேவனே எமது நல்ல மேய்ப்பனாயிருக்கின்றார் !**

இன்றைய வேதவாசிப்பு


ஆதியாகமம் 15 - 16

**"அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது."** (யோவான் 10:4)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே ஜீவிக்கிற இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் நான் உங்களுக்கு சுபீட்சமான நாளாக வேண்டுமென பிரார்த்திக்கின்றேன். பூமியில் வாழ்ந்தாலும் உங்கள் பரலோக பிதா தன்னுடைய ஒரே பேறான மகன் மூலமாக தேவனின் பரலோக இராஜ்ஜியத்திற்கு உரிமைப் பெற்றுக் கொள்ளும்படியாக அழைத்தார். உங்களை தேவன் தமது சொந்த பிள்ளையாக வேறுப்படுத்திக் கொண்டமையால் நீங்கள் அதிர்ஷ்டக்காரர்களாவீர்கள்.

தேவ பிள்ளைகளே, உங்களுக்கு உபகாரம் செய்வதற்கு உங்களை வழி நடத்த யாருமில்லை என்று துக்கப்படாதீர்கள் ஏனென்றால் உங்களுக்கு பெற்றோர் சகோதர சகோதரிகள், சிநேகிதர்கள் யாருமே இல்லாவிட்டாலும் முழு உலகத்தையும் படைத்து தன்னுடைய விருப்பத்தின் பேரில் நிர்வாகம் செய்யும் சர்வவல்லமையுடைய ஜீவிக்கின்ற தேவன் அநுக்கிரகம் செய்வாராக. மனிதன் ஒரு காரியத்தை வரையறைக்குள்ளேயே செய்ய முடியும். ஆனாலும் உங்கள் பரலோகப் பிதாவுக்கு எல்லாம் செய்ய முடியும். ஏனென்றால் உங்கள் ஆயட்காலத்தை மனிதனால் நீடித்து கொடுக்க முடியாது. ஆனாலும் உங்கள் படைப்பின் தேவ பிதாவுக்கு உங்கள் ஆயுட்காலத்தை நீடித்து கொடுக்க முடியும். உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக.

தேவ பிள்ளைகளே, மேற் குறிப்பிடப்பட்ட முக்கியமான வேதாகம வசனத்தில் தேவனது மந்தைகள் தேவனின் குரலை அறிந்து கொள்ளுமானால் அவைகள் தேவனின் பின்னாலேயே பயணம் செய்யும். எனபதையே தேவன் கூறுகிறார். தேவனின் ஒரே பேறான குமாரனான இயேசுக்கிறிஸ்துவே "மெய்யான நல்ல மேய்ப்பன்" வெளிப்படுகின்றார். உலகின் இயற்கை படைப்பினை நோக்கம்போது பலவிதமான மிருகங்கள், பறவைகள், மச்சங்கள, காணப்படுகின்ற. அவைகள் ஒன்றுக்கொன்று அறிந்து கொள்ளும்படியாக தேவனின் நியமனத்தின்படி இயற்கையாகவே குரலின் சத்தங்கள் கிடைக்கப்பட்டுள்ளன.தேவனின் பிள்ளைகளாகிய எங்களுக்கு தேவனின் ஆவி எமது உயிரோடு இணைந்து எங்களுக்குள்வாசம் பண்ணுவதானால் தேவன் அழைக்கும் சத்தத்திற்கு நாங்கள் செவி கொடுத்து அறிந்து அவரின் பின்னாலேயே செல்வோம் ஆவிக்குரிய பிள்ளைகளாகிய எங்களுக்கு எல்லா வேளையிலம் எமது பிதாவின் " குரலின் சத்தம்" கேட்க வேண்டுமானால் நாங்கள் தேவனுக்குள் இன்னும் அதிகமாக கிட்டிச் சேர வேண்டும் அப்படியானால் ஆவியோடு ஜெபித்து எல்லா வேளையிலும் தேவனின் "முகத்தைத் தேடி" தேவனோடு மிக நெருங்கியிருப்பின் தேவன் எந்நேரமும் அவரது ஆலோசனைகளைக் கொடுத்து எங்கள் வாழ்க்கைப் பயணத்தில் எங்களை முன்னோக்கிக் கொண்டு சென்று வெற்றி பெறச் செய்வார். தேவனின் திருக்குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவான தேவனின் ஒரே பரிசுத்த ஆவியோடு எமக்காக பலியானார். தேவன் எமது " நல்ல மேய்ப்பன்" ஆவார்.



என் தேவனே உங்கள் குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவின் காரணமாக நன்றி செலுத்துகினறேன். தேவகுமாரன் எனக்காக பலியானார். இன்றும் ஜீவிக்கின்ற தேவனாக இருப்பதானால் எனக்கு ஆலோசனைகளை கொடுத்து வழி காட்டுவாராக, தேவனே நீங்கள் இயேசுவின் மூலமாக வெளிப்படுத்துவதானால் ஸ்தோத்திரம். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

---

நானே நல்ல மேய்ப்பன்ஞு பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும்,
நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும், யோவான் 10:14

ஜீவ மன்னா

மே 30

வியாழன்

# உடன்படிக்கையுடன் உங்களை அழைத்த தேவன் !

இன்றைய வேதவாசிப்பு


ஆதியாகமம் 17 - 18

**"என்றென்றைக்கும் உன் சந்ததியை நிலைப்படுத்தி, தலைமுறை தலைமுறையாக உன் சிங்காசனத்தை ஸ்தாபிப்பேன் என்று ஆணையிட்டேன் என்றீர். (சேலா.)"**
(சங்கீதம் 89:4)

அன்பார்ந்தவர்களே இன்றும் உங்களுக்கு இனிமையான காலைப் பொழுதும் மகிழ்ச்சிகரமான நாளாகவும் வேண்டுமென இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். "நாளைய நாளில் என்ன நடக்குமென்று" நாளைய நாளைக் குறித்து நாங்கள் எதனையும் தீர்மானிக்க முடியாது ஆனாலும் இன்றைய நாளில் நாம் ஜீவிப்பதற்கு தேவனின் கருணை கிடைத்திருப்பதனால் நாங்கள் "அதிர்ஷ்டக்காரர்களாவோம் அத்தோடு எங்கள் வாழ்க்கை எழுபது வருடம் என்றும் பெலனிருப்பின் எனபதாவது வயது வரைக்கும் நாங்கள் வாழ ஆசீர்வதித்து இப்பூமியில் நாங்கள் வாழ்கின்ற கால வரையறையை எமக்கு தெரிவித்திருக்கும் சிருஷ்டிப்பின் தேவனானவரைக் குறித்து நாங்கள் அறிந்துக் கொண்டிருப்பதனால் "ஆசீர்வதிக்கப்பட்டவர்களாவோம்".

தேவ பிள்ளைகளே மேற் குறிப்பிட்ட முக்கியமான வேத வசனத்தில் வெளிப்படுத்தகின்றதாவது தேவனானவர் எம்மைத் தெரிந்து எங்களோடு ஒரு உடன்படிக்கை செய்துள்ளார்" எனபதாகும் . அங்கே தேவன் தாவீதோடு பொருத்தனை பண்ணியதாகவும், தேவன் தாவீதுக்கு ஆணையிடடுக் கொடுத்தார் என எழுதப்பட்டுள்ளது. தேவானானவர் தாவீதை இஸ்ரவேலருக்கு இராஜாவாக நியமித்தார். அதன் பிறகு அவரது பெருந்தன்மையின் காரணமாகவும், தேவனோடு அவர் கொண்டிருந்த அன்பின் ஐக்கிய உதவின் காரணமாகவும். தேவனோடு அவர் கொண்டிருந்த அன்பின் ஐக்கிய உறவின் காரணமாக, தேவன் அவன் மேல் பிரியப்பட்டு தேவன் உன் சந்ததியை நிலைப்படுத்தி தலைமுறை தலைமுறையாக உன் சிங்காசனத்தை ஸ்தாபிப்பேன் என்று தாவீதோடு உடன்படிக்கை செய்து கொண்டார் அதே போல் அது நிலையானதாகிற்று. உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக.

தேவ பிளளைகளே நீங்களும் நானும் பலவிதமான உப்ததிரவங்கள், பிரச்சினைகள், துன்பங்கள், மத்தியில் வாழகின்றோம. வியாதியில் வேதனையை அநுபவிக்கினறோம். ஆனால் தேவனாகிய காத்தர் தேவனின் திருக்குமாரன் இயேசுக்கிறிஸதுவின் மூலமாக எங்களை அவரண்டை சேர்தது எல்லா வியாதிகள், துன்பங்கள், உபத்திரவங்களனின்று எங்களை மீட்டுக் கொண்டதோடு வெற்றியும் பெற்றுக் கொடுத்தார். அது மாத்திரமின்றி நாங்கள் தேவனின் சொந்தப்பிள்ளைகளானபடியால் எங்களுக்கு விசேஷித்த வரப்பிரசாதங்கள் உரித்தாகும் ஆகையால் உன்னை சகல ஜாதிகளுக்கும ஒளியாக வைப்பேன் என்றும் முதிர்வயதுவரைக்கும் நான் அப்படியே "தலை நரைக்கும் வரை உங்களைத் தாங்கிச் செல்வேன என்றும் உன்னை வாலாக்காமல் தலையாக்குவேன் எனவும் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பேன் என்றும் இப்படியாக அநேக பொருத்தனைகளை தேவன் எம்மோடு செய்துள்ளார். அவைகள் அனைத்தும் நிறை வேறுவதாக நீங்களும் விசுவாசத்தோடிருந்து அவைகளை பெற்றுக் கொள்ளுங்கள் வெற்றிகரமான நாள்.



என் தேவனே நீர் எம்மைப் படைத்த தேவன் நீங்கள் எனக்கு எத்தனையோ பொருத்தனைகளைச் செய்துள்ளீர்கள் தேவனே அனைத்தையும் நிறைவேற்றுங்கள் அதற்கு விரோதமாக சத்துருவானவன் மேற் கொள்ளும் சகல காரியங்களும் வாய்க்காமற் போவதாக இயேசுவின் நாமத்தில் ஆமென்.

---

உங்கள் செவியைச் சாய்த்து, என்னிடத்தில் வாருங்கள்: கேளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும்; தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன். ஏசாயா 55:3

ஜீவ மன்னா

மே 31
வெள்ளி

**அன்பு இயேசுவை உங்கள் கரங்களைப் பிடித்துச் செல்ல இடங் கொடுங்கள் !**

இன்றைய வேதவாசிப்பு
ஆதியாகமம்
19 - 20

**"கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்."**
(எரேமியா 10:23)

அன்பார்ந்த தேவனுடைய பிள்ளைகளே, அன்பார்ந்த தேவ பிள்ளைகளே இயேசுக்கிறிஸ்துவின் இனிய நாமத்தில் இன்றைய நாள் அருமையான நாளாக வேண்டுமென வாழ்த்துகிறேன் சுமார் 02 கோடியே மூன்று இலட்சம் ஜனங்களில் நீங்கள் மிகவும் அதிர்ஷ்டக்காரர்கள் என்று இன்றைய நாளிலும் கூறுகிறேன். ஏனென்றால் நீங்கள் அரசாளப் பிறந்த இராஜரீக வம்சமாக ஆசாரியர்களாக தேவனுக்கென்று தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள். நீங்கள் அவருடைய சொந்த ஜனங்களாக இருக்கின்றீர்களா? இம்மாத்திரம் இறுதி நாள் வரை உங்களை வழி நடத்தியது தேவன் உங்கள் கரங்களைப் பிடித்து என்று விசுவாசிக்கின்றீர்களா? ஏனென்றால் எரேமியா 10:23ல் இஸ்ரவேலருக்கு தேவன் கூறுகிறதாவது மனுஷனுடைய வழிகள் ஆயத்தமாகி போவதல்ல அவனுடைய நடைகளை நிர்ணயித்து நடத்துவது கர்த்தரே என்பதாகும். தேவப் பிள்ளைகளே முக்கியமாக நான் உங்களுக்கு கூறுகிறதாவது நீங்கள் இறைவனோடு நடக்கும் இந்த பாதையில் நீங்கள் கர்த்தருடைய கையை இறுகப் பற்றிப் பிடித்து நடக்க முயற்சி செய்யாதீர்கள் ஏனென்றால் நாம் அவரது கையை பிடித்துக்கொண்டு செல்லும் போது எங்களுக்கு, பிரச்சினை, துன்பம் உபத்திரவங்கள் வரும் போது நாம் அவரின் கரங்களை விட்டு விடுகின்றோம் ஆகையால் தேவனை எங்கள் கரம் பற்றி வழி நடத்துங்கள் என முற்றிலுமாய் எம்மை அர்ப்பணிக்கும் வேளை அவர் ஒரு நாளும் உங்கள் கரங்களை விட்டு விடுவதில்லை.

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே ஒருவர் கனவில் இயேசுக்கிறிஸ்துவோடு கடற்கரையில் நடந்து கொண்டிருந்தார் அவர் இயேசு சுவாமியிடம் கேட்கிறார் இதுவரை உம்மோடு கூட நான் கடந்து வந்த பாதைகளை நான் பார்க்க வேண்டுமென்று அப்பொழுது பாதைகளை நோக்கிக் கொண்டிருந்த வேளை கடும் பிரச்சினைகள் இவரை சூழ்ந்திருந்த இடத்தில் பார்க்கும் போது இரண்டு கால்களின் பாதச்சுவடுகளின் அடையாளங்கள் மாத்திரமே இருந்த தாம் அப்பொழுது அவர் இயேசு சுவாமியிடம் எல்லா இடங்களிலும் நான்கு பாதச்சுவடு கள் இருக்க என்னைப் பிரச்சினைகள் சூழ்ந்திருந்த வேளை நீர் என்னோடு இருக்கவில்லையே நான் மாத்திரம் நடந்து வந்துள்ளேன் என்று கூறினார் அப்பொழுது இயேசு அந்த பிரச்சினைகளின் போதெல்லாம் நான் உன்னைத் தூக்கிச் சென்றேன் என்றார்.

தேவ பிள்ளைகளே, மேற் கூறிய கதையின்று நீங்கள் தேவனின் அன்பு உள்ளம் ஏப்படிப்பட்டதென்று அறிந்துக் கொண்டீர்களா? ஆகையால் மனங்கலங்காதிருங்கள் இயேசு சுவாமிக்கு உங்கள் கரங்களைப் பிடித்துக் செல்ல இடங் கொடுங்கள். பிரச்சினைகள் உங்களை நொறுக்கும் போது அவர் உங்கள் கரம் பிடித்துத் தூக்கிச் செல்வார். உங்களை முன் அழைத்த தேவன் கைவிடமாட்டார். ஒன்று மாத்திரம் அவருக்காகச் செய்யுங்கள். முழங்கால்படியிட்டு எல்லா வேளையிலும் ஜெபத்திலே அவரோடு இணைந்து விடுங்கள். வெற்றி நிச்சயம்.



என் தேவனை நான் உமது கரங்களைப்பற்றி செல்லும் வேளையில் விழுந்த விடுவேன். ஆனால் உங்கள் கரம் எம்மை பற்றி பிடிக்கும் போது நான் ஒரு நாளும் தவறி விழ மாட்டேன் என்னை உமக்கே அர்ப்பணிக்கிறேன்.~ஆமென்~

---

என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும்,
என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக. சங்கீதம் 19:14

# ஜெப நேரங்கள்



## பொதுவான ஜெபங்கள்

- திங்கள் முதல் வெள்ளி வரை ஞாயிறு தினங்களில்.
* அதிகாலை 04.00 மணி முதல் 06.00 மணி வரை ஊழியர்கள் ஜெபம்.
- திங்கள் செவ்வாய் வியாழன் தினங்களில்.
* காலை 07.00 மணி முதல் 09.00 மணி வரை முழு நேர ஊழியர்களின் ஜெபம்.
- திங்கள் செவ்வாய் வியாழன் தினங்களில்.
* மாலை 02.00 மணி முதல் 04.00 மணி வரை முழு நேர ஊழியர்கள் விசுவாசிகள் இணைந்து ஜெபம்.
- திங்கள் முதல் வியாழன் வரையிலும் சனி ஞாயிறு தினங்களில்
* இரவு 07.30 மணி முதல் 08.30மணி வரை தேவன் பெற்றுக்கொடுத்த அநுக்கிரத்திற்காக நன்றி பலி ஜெபம்.


## விஷேச ஜெபங்கள்

- திங்கள் கிழமை விஷேச ஜெபம்.
* காலை 09.00 மணி முதல் காலை 10.00 மணி வரை தேவன் செய்த நன்மைகள் நிமித்தம் ஸ்தோத்திர பலி ஜெபம்.
* காலை 10.00 மணி முதல் மாலை 02.00 மணி வரை ஒவ்வொரு குடும்பமாக குடும்ப ஜெபம்.
- செவ்வாய்க் கிழமை விஷேச ஜெபம்.
* காலை 09.00 மணி முதல் 02.00 மணி வரை இலங்கை வாலிபர்களுக்காக சபையில் வாலிப ஜெபம்.
* மாலை 05.00 மணி முதல் மாலை 06.00 மணி வரை சபை போதகரின் குடும்ப ஜெபம்.
* ஒவ்வொரு மாதமும் ஒரு செவ்வாய்க்கழமை காலை 09.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை முழு நேர ஊழியர்களின் விஷேச ஜெபம்.
- புதன் வெள்ளி தினங்களில் விஷேச ஜெபம்.
* காலை 09.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை தேசத்தில் ஆத்துமாக்களின் விடுதலைக்காக தண்ணீர் அருந்தாத உபவாச ஜெபம்.
- வியாழன் தினங்களில் விஷேச ஜெபம்.
* காலை 09.00 மணி முதல் 02.00 மணி வரை விசுவாசிகளின் குடும்பங்கள் ஒவ்வொரு குடும்பமும் தனித்தனி குடும்ப ஜெபம்.
- வெள்ளிக்கிழமை விஷேச ஜெபம்.
* இரவு 09.00 மணி முதல் அதிகாலை 01.00 மணி வரை சனிக்கிழமை சுகமளிக்கும் ஆராதனை வல்லமையாக நடைபெற ஜெபம்
* ஒவ்வொரு மாதமும் முதல் வெள்ளிக்கிழமை காலை 06.00 மணி முதல் 24 மணித்தியாலங்கள் உபவாச ஜெபத்தோடு இராவிழிப்பு ஜெபம்.
- சனிக்கிழமை தினங்களில் விஷேச ஜெபம்.
* காலை 8.00 மணி முதல் காலை 09.30 வரை சுகமளிக்கும் ஆராதனைக்காக ஊழியர்கள் இணைந்து ஒரு மன ஜெபம்
- ஞாயிறு தினங்களில் விஷேச ஜெபம்.
* காலை 09.00 மணி முதல் காலை 10.00 மணி வரை துதி நமஸ்கார ஆராதனைக்காக ஜெபம்.

## மேலதிகமான விஷேச ஜெபங்கள்.

* ஒவ்வொரு மாதமும் போயா தினங்களிலும் அரசாங்க விடுமுறை தினங்களிலும் காலை 09.00 மணி முதல் 04.00 மணி வரை உபவாச ஜெபம்.
* வெளி மாவட்டங்களில் சுவிஷே கூட்டங்கள் நிமித்தம் 21 நாட்கள் உபவாச ஜெபம்.

**கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதியும், நான் உமது சத்தியத்திலே நடப்பேன்; நான் உமது நாமத்திற்குப் பயந்திருக்கும்படி என் இருதயத்தை ஒருமுகப்படுத்தும்.**



**சங்கீதம் 86:11**

## இயேசுகிறிஸ்துவுக்கு மகிமை உண்டாவதாக !!!

### 20 வது வெளியீடு

தேவ பிள்ளைகளே,

ஜீவ மன்னா தினதியானங்கள் அணை தாண்டிய வெள்ளம் போல கடந்து வருகின்ற தேவ அநுக்கிரகத்தால் இவ்வண்ணமாக உங்கள் கரங்களில் கிடைக்கின்றது. என்றால் மிகையாகாது. இச் சஞ்சிகையின் மூல ஆசிரியர் ஆகிய எனது அறிவுத்திறமை, ஆத்தோடு கூடிய ஆத்மீக அனுபவங்கள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கி எழுதி உங்கள் கரம் கிடைக்கச் செய்வேனாகில் இதைத் தொடர்ந்து எனக்கு அறிந்த தெரிந்த மனிதர்களுக்கு மாத்திரமே இத்தியானங்களைக் கொடுக்க இயலுமானதாக இருந்திருக்கும். ஆனாலும் அவர்களிடம் பணம் கிடைக்கலாம். எனது இந்த ஜீவ மன்னா தினதியானங்களுக்கூடாக அவர்களது வாழ்க்கையில் மாற்றங்கள் ஆத்மீக வளர்ச்சி ஏற்படுமென்று நினைத்துப் பார்க்க முடியாது.

தேவ பிள்ளைகளே தேவனானவர் தேவ ஆவியானவரின் வழிகாட்டுதலின்படி உபவாசத்தில் ஜெபத்தில் என்னை தரித்திரிக்கும்படி செய்து தயாரித்து உங்களுக்குக் கிடைக்கச் செய்கின்றார் எனவே தான் ஜீவ மன்னா வாசகாகளாகிய உங்களிடமிருந்து விமர்சனக் கடிதங்கள் தொடர்ந்து கிடைத்துக் கொணடே இருக்கின்றன அப்படியாக தேவ காரியங்களுக்கு ஒத்தாசைக் கொடுக்கும் உங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் பரிசுத்த வேதாகமத்தில் என் ஜனங்கள் அறியாமையின் நிமித்தம் அழிந்து போகின்றார்கள் என்று தேவ வசனத்தில் கூறப்பட்டுள்ளது. ஆகையால் இந்த சஞ்சிகைக் கூடாக தினமும் வேத வசனத்தை வாசித்து அதற் கூடாக உங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் தேவனுக்கும் உங்களுக்குமான ஆத்மீக ஐக்கியத்தை உறுதிப்படுத்திக் கொள்வதோடு, ஆவிக்குரிய வளர்ச்சியை அதிகரித்துக் கொள்ள தேவனின் அநுக்கிரகம் உங்களுக்கு கிடைத்துள்ளது. ஆகையால் உங்கள் ஆவிக்குரிய வளர்ச்சி குறைந்து போகாதபடி அழிந்து போகாதபடி பாதுகாத்து இதற்கூடாக தேவனை அறிகின்ற அறிவை பெருக்கிக் கொள்ளுங்கள்.

இன்னுமாக பெரும்பாலான ஊழியர்கள் அதிகமாக சிரமப்பட்டு ஜீவ மன்னா உரிய நேரத்தில் உங்கள் கரங்களில் கிடைக்கச் செய்வதனால் நீங்கள் இயன்றளவு பலனைப் பெற்றுக் கொள்ளுமாறு ஞாபகப் படுத்துவதோடு அதிகமாக வல்லமை தைரியம், பெலன் எங்களுக்குக் கிடைக்கும்படியாக நீங்களும் உற்சாகமாக ஜெபிக்கும்படியாக அனைவரிடமும் கேட்டுக் கொள்கிறேன்.

**போதகர் ஏ.ஜே.ஜோசப்**

**சத்தியத்தின் தேவனே உமக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக!**

**ஜீவ மன்னா தின தியான புத்தகத்தை தபால் மூலம் ஒவ்வொரு மாதமும் பெற்றுக் கொள்ளலாம்.**


**பதிவு இலக்கம்:- CME/003/12/NPO**



**இயேசு கைவிடார் சுவிசேஷ பணியகம்**

இல 33/1, புதிய களனிப் பால வீதி, கொழும்பு -14.

☎ 011-2334865 📱 0714-922929

arulandu.joseph@gmail.com www.jesusnf.org



இவ 33:1 புதிய களனிப் பால வீதி, கொழும்பு -14, ஜீவ மன்னா குட் நிவ்ஸ் பிரிண்டஸ் அச்சகம் மூலம் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.